பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 02 வெள்ளிக்கிழமை 16.03.2018 கதிர் 131

## மகேந்திரனுக்கு பிடியாணை



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை

பக்கம் 18

# ஐ.நாவே! மௌனம் ஏன்?

## காணாமற்போனோரின் உறவுகள் வடமராட்சி கிழக்கில் போராட்டம்

**யாழ்ப்பாணம், மார்ச் 16**

**“ஐ.நா. சபையே! ஏன் இந்த மௌனம்? உறவுகளின் உண்மை நிலையை உடனே வெளிப்படுத்து” -எனக்கோரி வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் நேற் றுக் காணாமற்போனோரின் உறவினர்கள் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.**

**இலங்கையில் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை ஐ.நா. கண்டறியும் வரைத் தமது போராட்டங்களைக் கைவிடப் போவதில்லை என்றும் அவர்கள் உறுதி படத் தெரிவித்தனர்.**

காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி வடமராட்சி மருதங்கேணி மக்கள் நடத்தும் தொடர் போராட்டம் நேற்றுடன் ஓராண்டை எட்டியது. இதனை முன்னிட்டு மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று அங்கு நடத்தப்பட்டது.

அரசியல் தலைமைகள் தம்மைக் கவனிக்காத நிலையில், இலங்கையில் இடம்பெற்ற அநீதிகள், படு

பக்கம் 18




## ஞானசார தேரருக்கு பிடியாணை



கொழும்பு, மார்ச் 16

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு – கோட்டை

பக்கம் 18

## சபாநாயகருக்கு கடும் அழுத்தம்

கொழும்பு, மார்ச் 16

நாடாளுமன்றத்தில் கடந்த 6ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து சகலரையும் பாதுகாக்கும் சர்வதேச சமவாயச் சட்ட

பக்கம் 03

## வன்னிப் போர்க் கொடுமைகள் குறித்து ஜெனீவாவில் தமிழ்ப் பெண் சாட்சியம்!



ஜெனீவா, மார்ச் 16

இறுதிப் போரின் போதும் அதற்கு முன்பும் வன்னி மக்கள் அனுபவித்த கொடுமைகளை ஐ.நா. மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தார் கிளிநொச்சி வைத்தியசாலையில் அரச மருந்தாளராகக் கடமையாற்றிய திருமதி கமலாம்பிகை கந்தசாமி.

ஜெனீவா மனித உரிமைகள் சபையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பக்க நிகழ்வில் பங்கேற்று அவர் இந்த விடயங்களை

பக்கம் 03

## ஆலயங்களில் ஒலிபெருக்கி அதிக சத்தம் எழுப்பக்கூடாது

### உடனடியாக கட்டுப்படுத்துமாறு பொலிஸாருக்கு விக்கி பணிப்பு

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம், மார்ச் 16

வடக்கு மாகாணத்தில் அதிக சத்தத்துடன் ஆலயங்களில் ஒலிபெருக்கி இயக்கப்படுவதைக் கட்டுப்படுத்து

பக்கம் 18

## யாழ். மேயர் யார்? 26 இல் தெரியும்!

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் யார் என்பதைத் தீர்மானிப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

வடக்கு மாகாண உள்

பக்கம் 03

## ஹிரோசிமாவில் மைத்திரி



டோக்கியோ. மார்ச் 16

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது பயணத்தின் ஒரு

பக்கம் 18

## பேஸ்புக்கில் இனவாதம் பேசுவது பெரும் குற்றம்

### சட்ட நடவடிக்கைக்கு அரசுடன் அந்த நிறுவனம் ஒத்துழைக்கும்

கொழும்பு, மார்ச் 16

பேஸ்புக் சமூக ஊடகத்தைப் பயன்படுத்தி வெறுப்புப் பேச்சுக்களைப் பரப்புவது இலங்கைச் சட்டத்தின் கீழ் குற்றமாகும். அத்தகைய செயற்பாடுகளில்

பக்கம் 18

## நடேஸ்வராக் கட்டடத்தை விடுவிக்கவுள்ள பொலிஸ்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 16

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக் கட்டடம் மற்றும் கிணறு என்பன விரைவில் கையளிக்கப்படும் என வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உறுதி வழங்கியுள்ளார்

பக்கம் 18

## நீங்கியது பேஸ்புக் தடை

கொழும்பு, மார்ச் 16

இலங்கையில் பேஸ்புக்மீதான தடை நண்பகல் நீக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால விடுத்த விஷேட பணிப்புரையை அடுத்தே

பக்கம் 18

## இனி இது ரகசியம் அல்ல!

கண்டி திகணவில் முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் குறித்து விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது நடக்குமா, அப்படி நடந்தாலும், பிணைமுறி விவகாரத்தில் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து

பக்கம் 03

காலைக்கதிர் Kalaikkathir



# உள்ளூராட்சித் திணைக்களம் வடக்கு மாகாணம்

**2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்டஅறிவித்தல்**

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன் ஆகிய என்னால் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(இ)பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் வடக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ள கீழே பெயர்குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கான முதல்வர்/தவிசாளர், பிரதிமுதல்வர்/உபதவிசாளர்ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்கான முதலாவது கூட்டம் அட்டவணையில் குறிப்பிட்ட திகதி மற்றும் நேர அட்டவணையின் பிரகாரம் குறிக்கப்பட்ட இடங்களில் கூட்டப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

| தொ. இல. | உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | திகதி | நேரம் | கூட்டப்படும் இடம் |
|---|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாண மாநகர சபை. | 26.03.2018 | மு.ப.9.00 | யாழ்ப்பாண மாநகர சபை சபா மண்டபம். |
| 2. | சாவகச்சேரி நகர சபை. | 26.03.2018 | பி.ப.2.00 | சாவகச்சேரி நகர சபை சபா மண்டபம். |
| 3. | பருத்தித்துறை நகர சபை. | 27.03.2018 | மு.ப.9.00 | பருத்தித்துறை நகர சபை சபா மண்டபம். |
| 4. | வல்வெட்டித்துறை நகர சபை. | 27.03.2018 | பி.ப.2.00 | வல்வெட்டித்துறை நகர சபை சபா மண்டபம். |
| 5. | காரைநகர் பிரதேசசபை. | 28.03.2018 | மு.ப.9.00 | காரைநகர் பிரதேசசபை சபா மண்டபம். |
| 6. | வலிகாமம் மேற்கு பிரதேசசபை. | 28.03.2018 | பி.ப.2.00 | வலிகாமம் மேற்கு பிரதேசசபை சபா மண்டபம். |
| 7. | வேலணை பிரதேசசபை. | 29.03.2018 | மு.ப.9.00 | வேலணை பிரதேசசபை சபா மண்டபம். |
| 8. | வலிகாமம் தெற்கு பிரதேசசபை. | 29.03.2018 | பி.ப.2.00 | வலிகாமம் தெற்கு பிரதேசசபை சபா மண்டபம். |
| 9. | வலிகாமம் வடக்கு பிரதேசசபை. | 02.04.2018 | மு.ப.9.00 | வலிகாமம் வடக்கு பிரதேசசபை சபா மண்டபம். |
| 10. | வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை. | 02.04.2018 | பி.ப.2.00 | வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை சபா மண்டபம். |
| 11. | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை. | 03.04.2018 | மு.ப.9.00 | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை சபா மண்டபம். |
| 12. | பருத்தித்துறை பிரதேசசபை. | 03.04.2018 | பி.ப.2.00 | பருத்தித்துறை பிரதேசசபை சபா மண்டபம். |
| 13. | நல்லூர் பிரதேசசபை. | 04.04.2018 | மு.ப.9.00 | நல்லூர் பிரதேசசபை சபா மண்டபம். |
| 14. | வலிகாமம் கிழக்கு பிரதேசசபை. | 04.04.2018 | பி.ப.2.00 | வலிகாமம் கிழக்கு பிரதேசசபை சபா மண்டபம். |
| 15. | சாவகச்சேரி பிரதேசசபை. | 05.04.2018 | மு.ப.9.00 | சாவகச்சேரி பிரதேசசபை சபா மண்டபம். |
| 16. | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை. | 05.04.2018 | பி.ப.2.00 | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை சபா மண்டபம். |
| 17. | நெடுந்தீவு பிரதேசசபை. | 06.04.2018 | மு.ப.11.00 | நெடுந்தீவு பிரதேசசபை சபா மண்டபம். |
| 18. | கரைச்சிப் பிரதேச சபை. | 09.04.2018 | மு.ப.9.00 | கரைச்சிப் பிரதேச சபை சபா மண்டபம். |
| 19. | கரைத்துறைப்பற்று பிரதேச சபை. | 09.04.2018 | பி.ப.2.00 | கரைத்துறைப்பற்று பிரதேச சபை சபா மண்டபம். |
| 20. | மன்னார் நகர சபை. | 10.04.2018 | மு.ப.10.00 | மன்னார் நகர சபை சபா மண்டபம். |
| 21. | மன்னார் பிரதேச சபை. | 10.04.2018 | பி.ப.2.30 | மன்னார் பிரதேச சபை சபா மண்டபம். |
| 22. | நானாட்டான் பிரதேச சபை. | 11.04.2018 | மு.ப.10.00 | நானாட்டான் பிரதேச சபை சபா மண்டபம். |
| 23. | முசலி பிரதேச சபை. | 11.04.2018 | பி.ப.2.30 | முசலி பிரதேச சபை சபா மண்டபம். |
| 24. | மாந்தை மேற்கு பிரதேச சபை. | 12.04.2018 | மு.ப.10.00 | மாந்தை மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 25. | வவுனியா நகர சபை. | 16.04.2018 | மு.ப.10.00 | வவுனியா நகர சபை சபா மண்டபம். |
| 26. | வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை. | 16.04.2018 | பி.ப.2.30 | வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை சபா மண்டபம். |
| 27. | வவுனியா வடக்கு பிரதேச சபை. | 17.04.2018 | மு.ப.10.00 | வவுனியா வடக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 28. | வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. | 17.04.2018 | பி.ப.2.30 | வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை சபா மண்டபம். |
| 29. | மாந்தை கிழக்கு பிரதேச சபை. | 18.04.2018 | மு.ப.10.00 | மாந்தை கிழக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 30. | துணுக்காய் பிரதேச சபை. | 18.04.2018 | பி.ப.2.30 | துணுக்காய் பிரதேச சபை சபா மண்டபம். |

**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்,**
**முதியோர் இல்ல வளாகம்,**
**A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.**
**2018 மார்ச் 15.**

**ம.பற்றிக் டிறஞ்சன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடக்கு மாகாணம்.**

# காணாமற்போனோரால் இக்கட்டில் கூட்டமைப்பு

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் தெரிவிப்பு



வவுனியா, மார்ச் 16

ஜனாதிபதியின் பொது மன்னிப் பினூடாக அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்நடத்தும்போராட்டமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இக்கட்டான ஒரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள தனது பிரத்தியேகக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

காணாமற் போனவர்களை இரண்டு வகையாகப் பார்க்கலாம். ஒன்று – வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள். அந்தவகையில் விடுதலைப் புலிகளின் நூறுக்கு மேற்பட்ட போராளிகள் நேரடியாக குடும்ப அங்கத்தவர்கள் மூலமாக படையினரின் கைகளில் ஒப்படைக்கப்பட்டவர்கள்.

இரண்டாவது – செட்டிகுளம் தடை முகாம்களில் நேரடியாகக் கைது செய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள். அது மட்டுமல்ல, விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு காணாமற் செய்யப்பட்டவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின் அவர்களுக்கான பதிவுகள் கூட இல்லாத முறையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள்.

எனவே, வலுக்கட்டாயமாகக் காணா மல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விடயமானது யுத்தத்தின்போது காணாமற்போன விடயமானதும் இருக்கிறது. அதில் வலுக்கட்டாயமாக காணாமல் செய்யப்பட்டவர்களின் நிகழ்ச்சி நிரல் ஒட்டுமொத்தமாக மறைக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நடத்தும் போராட்டமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இக்கட்டான ஒரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் கைதிகள் விவகாரத்தில் விடுவிக்கப்படக் கூடியவர்கள் பெருமளவில் அரசினால் விடுவிக்கப்பட்டுள்ளனர். தற்போது சிறைகளிலுள்ள 150 இற்கும் மேற்பட்டவர்களில் பெரும் குற்றங்களைப் புரிந்த ஒரு தொகுதியினரும் அரசியல் கைதிகள் போல் உள்ளே இருக்கும் ஒரு நிலைமையும் இருக்கிறது.

அதேபோல், நேரடியாக ஆயுதங்களுடன் சம்பந்தப்பட்டுக் கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இலங்கை மத்திய அரசு இந்த விடயங்களில் விட்டுக் கொடுப்பு செய்வதற்கு இனவாதிகள் விடவில்லை. நாடாளுமன்றத்தினூடாக ஜனாதிபதி ஒரு பொது மன்னிப்பை வழங்கினால் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியும்.

அரசியல் காரணங்களுக்காக பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதி தயக்கம் காட்டி வருகிறார். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிப் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கும் போதுதான் அரசியல் கைதிகளின் பிரச்சினை முடிவுக்கு வரும் என்றும் அவர் தெரிவித்தார். (க–100)

# விழிப்புணர்வு செயலமர்வு

முல்லைத்தீவு, மார்ச் 16

உலகப் பாவனையாளர் உரிமை நாளான நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் பாவனையாளர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று இடம் பெற்றுள்ளது.

பாவனையாளர்கள் அலுவல்கள் அமைச்சின் முல்லைத்தீவு மாவட்ட செயலக நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பாவனையாளர்கள் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு, பாவனையாளர் அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் ந.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலக கணக்காளர் றெஜினோல்ட் மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர் க.தனபாலசிங்கம் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு மாவட்டத்தில் பாவனையாளர்கள் கொண்டிருக்கக்கூடிய உரிமை தொடர்பில் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.தொடர்ந்து டிஜிட்டல் வியாபாரம் தொடர்பில் மாவட்டட செயலகக் கணினிப் பிரிவு உத்தியோகத்தரால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (க–81)

காலைக்கதிர்
Kalaikkathir



# ரணிலைக் கவிழ்க்க 95 பேர் ஆதரவாம்?

கொழும்பு, மார்ச் 15

பிரதமர் ரணில் விக்கி ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 95 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்று மஹிந்த தரப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டிச் சம்பவங் களால் பிற்போடப்பட் டிருந்த இந்தப் பிரேரணையை விரைவுபடுத்த மஹிந்த அணி தீர்மானித்துள்ளது.

இந்தப் பிரேணைக்கு ஐக்கிய தேசிய கட்சியின் 30க்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பி னர்கள் ஆதரவை வெளியிட்டுள்ளனர் எனக் கூறப்படுகின் றது.

குறிப்பாக இராஜாங்க அமைச்சர்களான பாலிதரங்க பண்டார மற்றும் வசந்த சேனாநாயக்க ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர் மயன்ன திஸாநாயக்கவும் இதற்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் உறுப்பினர்கள் சிலரும் குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க உறுதியளித்துள்ளனர் என்றும் தெரியவருகிறது. (ஐ)

## சபாநாயகருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரைவில் சபாநாயகர் கரு ஜயசூரிய கையொப்பமிடக்கூடாது என்று கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகள் அழுத்தங்கொடுத்து வருகின்றன எனக் கொழும்பு ஊடகம் ஒன்றுசெய்திவெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

இந்த விடயத்தில் சபாநாயகர் தவறிழைத்தால் அது நாட்டுக்குத் துரோகமிழைத்ததாகவே கருதப்படும் என்று சிங்களத் தேசியவாத அமைப்புகளின் கூட்டணியான தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம் அறிவித்துள்ளது.

மேற்படி சட்டமூலம் மீதான விவாதம் கடந்த வருடம் ஜூலை 5ஆம் திகதி நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டு பிற்போடப்பட்டது.

மீண்டும் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதிக்குவிவாதம்பிற்போடப்பட்டது. பல்வேறு தரப்புகளினதும் எதிர்ப்புகளால் அரசினால் பிற்போடப்பட்ட இந்தச் சட்ட மூலம் மீதான விவாதம் கடந்த 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

கூட்டு எதிரணியின் கடும் எதிர்ப்பையும்மீறி அன்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, மேலதிக 37 வாக்குகளால் சட்டமூலம் நிறை வேற்றப்பட்டது.

சட்டமூலத்திற்கு ஆதரவாக 53 வாக்குகளும் எதிராக 16 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

எனினும், நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள் சட்டத்துக்கு முரணான வகையில் குறித்த சட்டவரைவு நிறைவேற்றப்பட்டுள்ளதால் அது சட்ட பூர்வமற்றது என்றும், அதில் சபாநாயகர் கையொப்பமிடக் கூடாது என்றும் கூட்டு எதிரணியின் தலைவரான தினேஷ் குணவர்தன எம்.பி. கடந்த 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஆராயப்படும் என்று சபாநாயகர் பதிலளித்தார். நாடாளுமன்றத்தில் சட்டமூலமொன்று நிறைவேற்றப்பட்ட பின்னர் அதில் சபாநாயகர் கையொப்பமிட்டால் தான் அது நடைமுறைக்கு வரும்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மேற்படி சட்ட வரைவுக்கு சபாநாயகர் கையொப்பமிடக்கூடாது என சபாநாயகருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தச் சட்டவரைவு கடந்த காலத்துக்குத் தாக்கத்தைச் செலுத்தாது என்பதால் தமிழ் மக்களுக்கு எவ்விதத்திலும் அது பயனளிக்காது என்று தமிழர் தரப்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊராட்சி ஆணையாளர் மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன் இதனை அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் தொடக்கம் அடுத்த மாதம் 18 ஆம் திகதி வரை வடக்கு மாகாணத்தில் உள்ள 30 உள்ளூராட்சி சபைகளில் முதல்வர் / தவிசாளர், பிரதி முதல்வர்/ உபதவிசாளர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டங்கள் பற்றிய விவரத்தை அவர் பிரகடனப்படுத்தியுள்ளார்.

(விளம்பர விவரம் 2 ஆம் பக்கத்தில்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சபைகளின் கூட்டங்களே முதலில் நடைபெறவிருக்கின்றன.

26 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். மாநகரசபையிலும், பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நகரசபையிலும் கூட்டங்கள் நடைபெறும்.

அடுத்த நாள் 27 ஆம் திகதி காலையில் பருத்தித்துறை நகரசபைக்கும் பிற்பகல் வல்வெட்டித்துறை நகரசபைக்குமான கூட்டங்கள் நடைபெறும்.

நெடுந்தீவு பிரதேசசபை மற்றும் மேற்கு பிரதேச சபை ஆகியவற்றுக்கு அடுத்த மாதம் முறையே 6 மற்றும் 12 ஆம் திகதிகளில் இந்தக் கூட்டங்கள் நடைபெறும். அன்றைய திகதிகளில் வேறு பிரதேச சபைகளுக்கான கூட்டங்களை உள்ளூராட்சி ஆணையாளர் கூட்டவில்லை.

ஏனைய தினங்களில் தினசரி இரண்டு சபைகளுக்கான கூட்டங்கள் காலையும் மாலையும் சம்பந்தப்பட்ட பிரதேச சபை, நகரசபை, மாநகர சபை மண்டபங்களில் நடைபெறுமாம்.

வடக்கு மாகாண சபையில் மொத்தம் 34 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. அவற்றுள் ஊர்காவற்றுறை பிரதேச சபை, பூநகரி சபை, புதுக்குடியிருப்புப் பிரதேசசபை, வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபை ஆகியவற்றுக்கான தேர்தல்களில் கட்சி அணிகள் தனித்து அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிருக்கின்றமையால், அங்கு இத்தகைய வட்டாரங்களை உள்ளூராட்சி ஆணையாளர் கூட்டமாட்டார். அங்கு வெற்றி பெற்ற கட்சியின் செயலாளர் பரிந்துரை செய்யும் பெயர்களைச் செய்வோர் தவிசாளர், உபதவிசாளர்களாக நியமிக்கப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# ஊழல், மோசடிகள் தொடர்பில் 1,700க்கும் மேல் முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 16

றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீனின் கொலை, 'மிக்' விமானக் கொள்வனவு உட்பட 1,700க்கும் மேற்பட்ட ஊழல், மோசடி கள் தொடர்பான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அவை தொடர்பான வழக்குகளை துரிதமாக விசாரித்து தீர்ப்புகளை வழங்க வேண்டியது அவசியம் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் பிரதான அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். நீதித்துறை சுதந்திரமாக இயங்கவேண்டும் என்பது மாத்திரமல்ல, அது வினைத்திறனாகவும் நவீனமயப்படுத்தப்பட வேண் டும் எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளைத்துப்போட்டு மடக்குவதில் அது தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவினால் வெளிப்படுத்தப்பட்ட தீவிரம், வேகம், முனைப்பு, மும்முரம், திடம் எல்லாம் இந்த விடயத்தில் காட்டப்படுமா என்றும் கேள்வி எழுப்பப்படுகின்றது. ஆனால் அப்படி நடப்பதற்கு வாய்ப்பே இல்லை என்கின்றன சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்.

அதற்கான காரண, காரியத்தை அறிவதற்கு நாங்கள் சரித்திரத்தைச் சற்றுப் பின்னோக்கிப் பார்க்க வேண்டியிருக்கும்.

அது நடந்து 1970களின் பிற்பகுதியில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர்.

அந்த நேரத்தில் பொலன்னறுவையில் ஒரு விவசாய நிகழ்வு நடந்தது. நாட்டின் சிறந்த விவசாயி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவருக்கு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா விருது வழங்கி கௌரவித்தார். அந்த விருது வழங்கும் சமயத்தில் நாட்டின் தலைசிறந்த விவசாயியாகத் தெரிவு செய்யப்பட்டவர் மேடையில் வைத்து ஜனாதிபதியிடம் ஒரு கோரிக்கையை விடுத்தார். படித்துப் பட்டம் பெற்று வேலையின்றி இருக்கும் தமது மகனுக்கு ஒரு வேலை வழங்கும் படி அவர் கோரினார். அந்த மேடையில் வைத்தே ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அந்த விவசாயியின் கோரிக்கையை நிறைவேற்றினார். அந்த விவசாயியின் மகனுக்கு பொலிஸில் உதவி அத்தியட்சகர் பதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அவர்தான் இப்போது கண்டிக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைவராகவும் இருக்கும் டி.ஐ. ஜியான எஸ்.எம்.விக்கிரமசிங்க.

ஐ.தே.கட்சியினால் நியமனம் பெற்ற விக்கிரமசிங்கவுக்கு அன்று முதல் ஏறுமுகம் தான். பொலன்னறுவையைச் சேர்ந்த உள்ளூர் அரசியல்வாதியான மைத்திரிபால சேனநாயக்கவுடன் ஆரம்பத்தில் இருந்தே அவர் நெருங்கிப் பழகிக் கொண்டார்.

சந்திரிகாவின் காலத்திலேயே ஜனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவுக்கு உள்ளீர்க்கப்பட்டார். மஹிந்த ஜனாதிபதியானதும் அதுவரை சந்திரிகா அரசில் முன்னிலை வகித்த பல பாதுகாப்பு அதிகாரிகள் தூக்கிக் கடாசப்பட்டனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அச்சமயம் வலது கரமாக விளங்கியவர் மைத்திரிபால சிறிசேன. அவருக்கு இந்த பொலிஸ் அதிகாரி நெருக்கமானவர் என்பதால் இவர் மட்டும் விட்டு வைக்கப்பட்டார்.

மஹிந்த பதவி இறங்கி, மைத்திரி ஜனாதிபதியானதும் ரணில் விக்கிரமசிங்க போல, இந்த விக்கிரமசிங்கவின் சாதகத்திலும் நல்ல யோகம். கொடி கட்டிப் பறந்தார்.

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு இவரது பெயர் அடிபட்ட போதிலும், ஐ.தே.கவினதும் விருப்பத்தை நிறைவு செய்வதற்காக அது பூஜித ஜயசுந்தரவுக்கு வழங்கப்பட்டது. அவர் ஓய்வு பெறும் போது சில வாரங்களுக்காவது இந்த விக்கிரமசிங்க பொலிஸ் மா அதிபர் பதவியை வகிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விக்கிரமசிங்கதான் கண்டியில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்ந்த போதும் இப்போதும் அதற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருப்பவர்.

திகணவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்குப் பொறுப்பான பிரதான சூத்திரதாரி என்ற சந்தேகத்தில் மஹாசன் பலகய அமைப்பின் தலைவர் அமித் வீரசிங்க பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரைத் திகணவுக்கு அழைத்து, பொலிஸ் காவலில் இருந்த நான்கு முஸ்லிம்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு சிங்களவர்களைக் கொண்டு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்யும்படி வழிப்படுத்தியவரே ஒரு மூத்த பொலிஸ் அதிகாரிதான் என்று கைது செய்யப்பட்டுள்ள அமித் வீரசிங்கவின் மனைவியான ஜெயாங்கனி சித்தும் குமாரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்தப் பொலிஸ் அதிகாரி ஜனாதிபதிக்கு நெருங்கிய டி.ஐ.ஜியான எஸ்.எம்.விக்கிரமசிங்கவே என்று வண. அம்பிட்டிய சுமண தேரர் அடித்துக் கூறுகின்றார். தாம் கூறும் கூற்றுக்கு வீடியோ, ஓடியோ ஆதாரங்கள் எல்லாம் உண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

சட்டம், ஒழுங்கு அமைச்சு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடம் இருந்த சமயம் இந்தக் கலவரங்கள் நடந்தேறியமையையும் –

இந்தக் கலவரங்களை அடுத்து, ஐக்கிய தேசிய கட்சிக்குள் பிரதமர் ரணில் தரப்புக்கு எதிரான சஜித் பிரேமதாஸா தரப்பில் இருக்கும் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு அந்த சட்டம், ஒழுங்கு அமைச்சு ஜனாதிபதியால் வழங்கப்பட்டமையையும் சில வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மேற்படி, அமித்வீரசிங்கவின் மனைவி மற்றும் பௌத்த பிக்கு தெரிவிக்கும் தகவல்களையும், பிரதமரிடம் இருந்து அந்த அமைச்சு பறிக்கப்பட்டு அவருக்கு ஒத்துவராத தரப்பிடம் கையளிக்கப்பட்டமையையும் நோக்கும்போது, நியமிக்கப்படக்கூடிய உத்தேச ஆணைக்குழு பயனுறுதி மிக்கதாகச் செயற்படும் என நம்ப முடியாதிருக்கின்றது.

முன்னைய பல ஆணைக் குழுக்கள் போல இதுவும் கண்துடைப்பு ஆணைக்குழுவாக முடியக் கூடும்.

-மின்னல்-

## வன்னிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக் கூறினார்.

இலங்கை தொடர்பாக முன்னாள் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் உறுப்பினராக இருந்த ஜஸ்மின் சூகா தலைமையில் இடம்பெற்ற இந்த உபகுழுக் கூட்டத்தில் சர்வதேசப் பிரதிநிதிகள் பலர் பங்கேற்று அவரின் உரையைக் கூர்ந்து அவதானித்தனர்.

கமலாம்பிகை கந்தசாமி மேலும் தெரிவித்தவை வருமாறு:

போரின்போது தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படு கொலை இடம்பெற்றதை நான் கண்டிருக்கின்றேன்.

நான் மல்லாவி வைத்திய சாலையில் 1996ஆம் ஆண்டு முதல் அரச மருந்தாளராகப் பணியாற்றினேன். நான் அங்கு சேவையில் இருக்கும்போது, அதிகளவான பொதுமக்கள் படுகாயமடைந்து சிகிச்சை பெற வந்தனர்.

பாலியல் கொடுமைகளுக்குள்ளாகிய இளம் பெண்களும் அங்கு சிகிச்சைக்காக வருகை தந்தனர் (அப்போது மல்லாவி இராணுவக் கட்டுப்பாடிலிருந்தது). எனக்குத் தெரிந்து பல பாலியல் கொடுமைகள் அங்கு இடம்பெற்றுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிக்குண்டிருந்த மக்களுக்கு மருந்துகளை அனுப்புவதற்கு அரசு கடமைப்பட்டிருந்தது. ஆனால் எமக்குத் தேவையான முழுமையான மருந்துகளை அரசு அனுப்பவில்லை.

குறைந்தளவான மருந்துகளே எமக்குக் கிடைத்தன. பல குறைபாடுகள் காணப்பட்டன. வைத்தியசாலையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டால் மின்பிறப்பாக்கியை சர்வதேச செஞ் சிலுவைச் சங்கமே வழங்கும். மருந்துக்குறைப்பாடு ஏற்பட்ட போதும் செஞ்சிலுவைச்சங்கம் உதவியது.

மல்லாவி வைத்தியசாலை அமைந்திருந்த பகுதியில் எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றன. பல மருத்துவ அதிகாரிகள் கடமையை புறக்கணித்து வெளியேறினர். ஆனால் அவர்களை நாம் குறைகூற முடியாது.

தமது உயிரை அவர்கள் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அதன்பின்னர் 2004ஆம் ஆண்டிலிருந்து 2008ஆம் ஆண்டுவரை கிளிநொச்சி வைத்தியசாலையில் பணியாற்றினேன்.

இந்தக் காலப்பகுதியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, முள்ளிவாய்க்கால் பகுதிகளில் போர் தீவிரமடைந்தது. போரில் சிக்குண்ட ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் நான் அரச மருந்தாளராக பணியாற்றியபோது எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

வைத்தியசாலை மீதும் தாக்குதல்கள் இடம்பெற்றன. மக்கள் கால்கள், கைகள், கண்களையிழந்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் – என்றார்.

காரைநகரைச் சேர்ந்த திருமதி கமலாம்பிகை கந்தசாமி, தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வருகிறார். இவர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்த மாவீரர் விக்டரின் தாயாராவார். (ஐ)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அவரசகால நிலை எப்போது நீங்கும்?

கடந்த வாரம் கண்டி, திகனப் பகுதியில் சிறுபான்மையின ரான முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்ந்த வன்முறைகளை அடுத்து, அரசு நாடு முழுவதிலும் ஊரடங்குச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 6 ஆம் திகதி அவசரகால நிலைமையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரகடனம் செய்தபோது, அவர் அதற்கான கால அவகாசம் எதையும் அறிவிக்கவில்லை. அடுத்த அறிவிப்பை அவர் விடுத்து அதனை முடிவுறுத்தும் வரை அது தொடரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், அவசர காலச் சட்டத்தை ஜனாதிபதி அறிவித்த சமயம், அவரும் ரணில் விக்கிரமசிங்கவும் பிறநாடுகளின் இராஜதந்திரிகளை, வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து அது குறித்தும் நாட்டின் பாதுகாப்பு நிலைவரங்கள் பற்றியும் விளக்கினர். அப்போது இந்த அவசர கால நிலைமை ஒரு வார காலத்துக்கே பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது, அது தோடு காலாவதியாகி விடும் என்று தெரிவித்திருந்தனர்.

அதன்படி கடந்த 13 ஆம் திகதி - செவ்வாயன்று - அது காலாவதியாகி இருக்க வேண்டும். காலாவதியாகவில்லை.

அதன் பின்னர் புதிய சட்டம், ஒழுங்கு அமைச்சராகப் பதவியேற்றிருந்த ரஞ்சித் மத்துமபண்டாரவும் அவசர காலச் சட்டம் குறித்துக் கருத்து வெளியிட்டார்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை தேறிவிட்டது. அது வழமை நிலைக்கு வந்து விட்டது. அதனால் வியாழன் (நேற்று) நள்ளிரவுக்குப் பின்னர் அதனை நீடிப்பதற்குத் தேவை ஏதும் இல்லை. - என்ற சாரப்பட அவர் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டார். ஆனாலும் அவசரகால நிலைமை நீக்கப்பட வேயில்லை.

இப்போது ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ அவசர கால நிலைமை நீக்கம் குறித்துப் புதுத் தகவல் வெளியிடுகின்றார்.

"அவசர கால நிலைமையை தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதியே விடுத்தார். அதை நீக்கும் அதிகாரமும் அவருக்கே உண்டு. அவர் நாட்டில் இருக்கும்போதுதான் அப்படி அவசர கால நிலைமையை நீக்கும் உத்தரவைப் பிறப்பிக்க முடியும். எதிர்வரும் 17 ஆம் திகதிதான் (நாளை தான்) அவர் தமது வெளிநாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்புவார். அதன்பின்னரே அவர் தீர்மானம் ஒன்றை எடுத்துத் தேவைப்பட்டால் அவசர கால நிலைமையை நீக்குவார்." - என்று கருத்து வெளியிட்டிருக்கின்றார் ஜனாதிபதியின் செயலாளர்.

ஆகவே, நாளை ஜனாதிபதி நாட்டுக்குத் திரும்பிய பின்னர்தான் அவசர கால நிலைமை குறித்து ஒரு தீர்மானம் எடுக்கப்படும். அது வரை யார் என்ன கருத்தை வெளியிட்டாலும் தற்போது நடைமுறையில் உள்ள அவசர கால நிலைமையில் மாற்றம் ஏதும் ஏற்படாது. அது தொடரும்.

அதேவேளை சமூக ஊடகங்கள் மீதான தடை ஓரளவுக்கு நீக்கப்பட்டு அந்த விடயத்தில் வழமை நிலைமை திரும்பியிருக்கின்றது. 'வட்ஸ் அப்', 'வைபர்' மீதான தடைகள் நேற்று முன்தினம் நீக்கப்பட்ட நிலையில், முகப்புத்தகம் மீதான தடை முன்னர் அறிவிக்கப்பட்டமைக்கு மாறாக, ஒருநாள் முன்னதாக - நேற்றே - நீக்கப்பட்டு விட்டது.

ஆனால், இந்த சமூக ஊடகங்கள் மீதான தடை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமது ஜப்பான் விஜயத்தின்போது தெரிவித்தவை என்று வெளியான தகவல்கள் சந்தி சிரிக்கக் கூடியனவாக அமைந்துள்ளன.

சமூக ஊடகங்கள் மீதான தடை பொருளாதாரத்தில் - உல்லாசப் பயணத்துறையில் - தகவல் தொடர்பாடலில் - பல தாக்கங்களைப் பின்னடைவுகளை ஏற்படுத்துகின்றது என்றும், இதனால் நாட்டுக்குப் பெரும் அபகீர்த்தியும் வீழ்ச்சியும் என்றும் சர்வதேச அவதானிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், கல்விமான்கள் என்று பலதரப்பினரும் திரும்பத்திரும்பக் கூறுகின்றனர்.

ஆனால், ஜனாதிபதியோ, ஜப்பானில் போய் இருந்து கொண்டு சமூக ஊடகங்களுக்குத் தடை விதித்தமையால் தொலைத்தொடர்புத் திணைக்களத்துக்கு ஒருநாள் வருமானம் இருநூறு கோடி ரூபா அதிகரித்திருப்பதாகக் கூறி பெருமிதம் கொள்கின்றார். இதனைக் கேட்கும்போது சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை!

நாட்டில் நோய்கள் பரவி, பெரும் பிணி பீடித்தால், மருந்துக் கடைகளில் மருந்துகள் அமோகமாக விற்பனையாகும். அதைக் காட்டி நோய்கள் நாட்டில் பரவுவதால் லாபம்தானே என்று கூறுவது போல இருக்கின்றது, சமூக ஊடகங்களுக்கான தடையினால் தொலைத்தொடர்புத் துறைக்கு ஏற்பட்ட வருமானத்தை பெருமையாகக் கூறுவதும்.

'வட்ஸ் அப்', 'வைபர்', முகப்புத்தகம் மூலமான தொடர்பாடல்கள் திடீரெனத் துண்டிக்கப்பட்டால் தமது உடனடி வெளிநாட்டு தொடர்பாடலுக்கு சாதாரண தொலைபேசி இணைப்பையே மக்கள் பயன்படுத்த வேண்டியிருப்பர். அதனால் அந்த வருமானத்தில் சற்று உயர்ச்சி இருக்கும். ஆனால் நாட்டின் ஒட்டு மொத்த வருமானத்தில் அத்தடை பெருவீழ்ச்சியையே ஏற்படுத்தும்.

இதைக் கூடப் புரிந்து கொள்ளாதவர்கள் கைகளில், நாடு சிக்கியிருப்பது நமது பேரவலமின்றி வேறில்லை.

## இலங்கைக்கு மேலும் 3 ரோந்துக் கப்பல்களை வழங்குகின்றது ஆஸ்திரேலியா அரசு



கொழும்பு, மார்ச் 16

இலங்கைக்கு இந்த ஆண்டு மேலும் மூன்று ரோந்துக் கப்பல்களை ஆஸ்திரேலியா வழங்கவுள்ளது. இலங்கைக்கான கடல்சார் கண்காணிப்புத் திறனை வலுப்படுத்தும் நோக்கிலேயே இந்தக் கப்பல்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த ஆண்டு போர்ட் வகையை (Port Class vessels) சேர்ந்த மூன்று கண்காணிப்புக் கப்பல்கள் இலங்கையின் கடலோரக் காவல்படைக்கு வழங்கப்படும்.

ஆஸ்திரேலியத் தூதுவர் பிரைஸ் ஹட்சிசன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

2014 ஆம் ஆண்டு இலங்கைக் கடற்படைக்கு ஆஸ்திரேலியா வழங்கியிருந்த இரண்டு பே வகை (Bay Class) கண்காணிப்புக் கப்பல்களுக்குத் தேவையான இரண்டு இயந்திரங்களைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலி துறைமுகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விலேயே மேலும் மூன்று கண்காணிப்புக் கப்பல்களை ஆஸ்திரேலியா வழங்கவுள்ளது என பிரைஸ் ஹட்சிசன் கூறினார்.

ஆள்கடத்தலை தடுப் பதற்கான, ஆஸ்திரேலியாவின் மிகச் சிறந்த பங்காளனாக இலங்கை விளங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## சுவிஸில் புலிகளுக்கு நிதி சேகரித்த வழக்கு விசாரணைகள் முடிவு; தீர்ப்பு ஜூனில்

சுவிற்ஸர்லாந்தில் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள 13 ஈழத் தமிழர்களுக்கும் எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு நேற்று முன்தினம் முடிவடைந்துள்ளது. இந்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம்திகதி அறிவிக்கப்படும்.

1999ஆம் ஆண்டுக்கும், 2009ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், விடுதலைப் புலிகளுக்காக 15 மில்லியன் சுவிஸ் பிராங் நிதியை சேகரித்து, பயங்கரவாத செயற்பாடுகளுக்கு துணைபோனார்கள் என்று சுவிஸ், ஜேர்மனி, இலங்கையைச் சேர்ந்த 13 பேருக்கு எதிராக சுவிஸ் சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தொடர்ந்திருந்தது.

பெலின்சோனா சமஷ்டி குற்றவியல் நீதிமன்றத்தில் கடந்த 8 வாரங்களாக நடந்து வந்த இந்த வழக்கு நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது.

இந்த வழக்கின் தீர்ப்பு ஜூன் 14 ஆம் திகதி அறிவிக்கப்படும்.

இந்த வழக்கிற்கு 3.79 சுவிஸ் பிராங் (4 மில்லியன் டொலர்) செலவு ஏற்பட்டுள்ளதாகவும், தமது கட்சிக்காரரான பிரதிவாதிகள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால், இந்த செலவுத் தொகையை அவர்கள் செலுத்த நேரிடும் என்றும் குற்றம்சாட்டப்பட்டவர்களின் சட்டவாளரான ஜீன் - பியரே கர்பாடே தெரிவித்துள்ளார்.

## திஸ்ஸமகாராமவில் கடைகளில் தீ!

கொழும்பு, மார்ச் 16

திஸ்ஸமகாராம பகுதியில் உள்ள கடை ஒன்றில் தீ விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் இந்தத் தீ விபத்துச் சம்பவம் இடம் பெற்றதாகவும் நிறப் பூச்சுக் கடை ஒன்றில் ஏற்பட்ட தீ பின்னர் அருகில் இருந்த இரண்டு கடைகளுக்குப் பரவியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசவாசிகளுடன் வீரவில கடற்படைத் தீயணைப்புப் படையினரும் இணைந்து தீயைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நாமல் மொஸ்கோவுக்கு

ரஷ்யாவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க, கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் வரும் மார்ச் 18 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலைச் சுதந்திரமான கண்காணிப்பாளராகக் கண்காணிப்பதற்கு வருமாறு நாமல் ராஜபக்ஷவுக்கு ரஷ்யா அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பை ஏற்று, நாமல் ராஜபக்ஷ நேற்று ரஷ்யாவுக்குப் புறப்பட்டார்.

## இலங்கையின் அபிவிருத்தியை வெற்றிகொள்ள சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் ஆதரவு



கொழும்பு, மார்ச் 16

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஜூக்கியா அமானோ தெரிவித்துள்ளார்.

சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஜூக்கியா அமானோ உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இலங்கை வந்தார்.

இலங்கை அணுசக்தி அதிகாரசபையின் வளாகத்திற்கு அவர் விஜயம் செய்திருந்தார்.

சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் உதவிகளும் இலங்கைக்கு வழங்கப்படுகின்றன.

அணுசக்தி சார்ந்த இலங்கையின் அடைவுகள் பாராட்டத்தக்கவையாகும். பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த அணுசக்தி சிகிச்சை நிலையம் முக்கியமானதாகும்.

## நாளை

17.03.2018
சனிக்கிழமை

நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ. 8.04 வரை
திதி: அமாவாசை மு.இ. 7.07 வரை
சுபநேரம்: 03.19—04.49வரை
இராகுகாலம்: 09.19—10.49வரை

# இந்தியாவை உளவு பார்க்க இலங்கையின் பெரிய ராடர்?

கொழும்பு, மார்ச் 16

இந்தியாவின் பெரும் ராடர் கோபுரம் ஒன்றையும், கடல் வலய மீட்பு ஒத்துழைப்பு நிலையம் ஒன்றையும் இலங்கையில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



இலங்கையின் தென் கடலோரப் பகுதியிலேயே இது அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோபுரத்தினூடாக இலங்கையின் தென் கடலோரத்திலிருந்து இந்தியா வின் கப்பல்களை உளவு பார்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்ற கேள்வியையும் அந்த ஊடகம் விடுத்துள்ளது.

இலங்கையின்துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டைத்துறைமுகம் ஆகியன சீனாவுக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் இந்தியா அதிருப்தி அடைந்துள்ளது.

இது குறித்து அவ்வப்போது அது கேள்வியும் எழுப்பிவருகிறது. இந்த நிலையிலேயே குறித்த ராடர் கோபுரமும் கடல் வலய மீட்பு ஒத்துழைப்பு நிலையமும் அமைக்கப்படவுள்ளன என்றும் அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, குறித்த தென் கடலோரப் பகுதிகளில் எந்தவொரு வெளி நாட்டு இராணுவ நடவடிக்கைக்கும் அனுமதி அளிக்கப்படமாட்டாது என இலங்கை தொடர்ந்தும் கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க)

# இணைய வர்த்தகம் தொடர்பில் புதிய சட்டம்

கொழும்பு, மார்ச் 16

இணையத்தின் ஊடான கொடுக்கல் வாங்கல்களுக்காக புதிய சட்டக் கட்டமைப்பு முறை ஒன்றை அறிமுகப் படுத்த நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஈ-வர்த்தகம் சம்பந்தமாக இலங்கையில் தற்போதிருக்கின்ற சட்டமுறை பலவீனமானது என்பதுடன் அது சம்பந்தமாக சரியாகச் செயற்படக்கூடிய ஒழுங்குமுறைக்கட்டமைப்பொன்று இல்லாமை பிரச்சினைக்குரியது என நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக சர்வதேச வர்த்தக மத்திய நிலையத் துடன் இணைந்து ஈ-வர்த்தகம் சம்பந்தமாக புதிய சட்டக் கட்டமைப்பு முறை ஒன்றை வகுப்பதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது.

அரச நிறுவனங்கள், பொது மக்கள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் பங்களிப்புடன் நேற்றும் இன்றும் கொழும்பில் இந்தப் பேச்சு இடம்பெறுகிறது.

தற்போது நாட்டின் சனத் தொகையில் 33 வீதமானோர் இணையப் பயன்பாட் டாளர்கள் என்பதுடன் அதில் அதிகமானவர்கள் 25 முதல் 34 வயதுக்கு இடைப்பட்டோர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விருது வழங்கும் விழா

யாழ். மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது வழங்கும் விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறும்.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்லையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் கலந்து கொள்வார்.

இவ்விழாவில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின்ஏற்பாட்டில்தேசியரீதியிலும்நடைபெற்ற இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் சிறப்பான ஆக்கத்திறனை வெளிப்படுத்தியமை குறித்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

# அரசமைப்பு நடவடிக்கைகளை மீள ஆரம்பியுங்கள் - அமைச்சர் மனோ

அரசமைப்பு நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க வேண்டும் என அமைச்சர் மனோ வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டில் ஏற்பட்ட பல்வேறு மாறுபட்ட சூழ்நிலைகளால் புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.



உள்ளூராட்சி மன்றத் தேர்தல், கண்டி வன்முறை மற்றும் அரசில் ஏற்பட்டிருந்த ஸ்திரமற்றத் தன்மை என்பன, இந்தப் பணிகளைப் பாதித்தன. இதனால், நீண்ட காலமாக எதிர்பார்க்கப்படுகின்ற அரசியல் தீர்வும் தாமதிக்கிறது.

இந்தநிலையில், அரசமைப்பு உருவாக்கப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கும்வகையில்,அரசமைப்பு வழிநடத்தல் குழுவை மீண்டும் கூட்டுவதற்கு வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும்அமைச்சர்மனோகணேசன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தாம் ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்து வலியுறுத்தவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிரதமருக்கு எதிரான பிரேரணையை நல்லநேரம் பார்த்து கொண்டுவருவோம்



## தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நல்ல நேரம் பார்த்துக் கொண்டு வருவோம் எனக் கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற கூட்டு எதிரணியின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறினார்.

மேலும், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கான ஒப்பம் பெறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் நிலைவரம் குறித்து தாமதமாகியதே அன்றி, அதனை கொண்டுவரும் தீர் மானத்தில் மாற்றம் இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

# பந்துலவுக்குகலாநிதிப் பட்டம்!

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனவுக்கு கலாநிதிப்பட்டம் வழங்கப்பட உள்ளது.

சீனாவின் பெய்ஜிங் பல்கலைக்கழகம் ஒன்றினால் இந்த கலாநிதிப் பட்டம் வழங்கப்பட உள்ளது.

சீனாவின் பெய்ஜிங் வெளிநாட்டு கற்கை பல்கலை கழகத்தின் துணைவேந்தர் ஜீ ஆவென் ஜீயெனின் தலைமையில் இன்றைய தினம் இந்தக் கலாநிதிப்பட்டம் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார வணிகத் தொடர்புகள் குறித்து பந்துல குணவர்தன சமர்ப்பித்த ஆய்வுக்காக



இந்தக் கலாநிதிப் பட்டம் வழங்கப்படுகின்றது.

இதேவேளை, 2013 ஆம் ஆண்டில்பெய்ஜிங் பல் கலைக்கழகத்தால் வழங்கப் பட்ட புலமைப் பரிசிலின் அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டிருந்தது. கலாநிதிப் பட்டம் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் உள்ளிட்ட பலரும் பங்கேற்க உள்ளனர்.

# வாழ்க்கையை வாழ்வோம்

நாமும் வாழ்க்கையை வாழும் போது நாம் கடவுளிடமிருந்து வந்தவர்கள் என்பதை நம்முடைய நற்செயல்கள் எடுத்துகாட்டுகின்றன.




என்னை அனுப்பியவரின் விருப்பத்தையே நாடுகிறேன். (யோவான் 5:30). கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டதாக இருக்கிறது? வாழ்க்கையை இருத்தல், பிழைத்தல், வாழ்தல் என்று 3 விதமாக வாழலாம். இருத்தல் என்பது சராசரித்தனமான காரியங்களை செய்து கொண்டு, நம் மனித மாண்பின் மேன்மையை உணராமல் வாழ்ந்து மடிவது.

உதாரணமாக எப்படி இருக்கிறீர்கள்? என்று யாராவது கேட்டால், ஏதோ இருக்கிறோம் என்று பதில் சொல்கிறோமே அது போன்றது. பிழைத்தல் என்பது முழு ஈடுபாட்டுடன் வாழாமல் ஏதோ இந்த உலகத்திற்கு வந்துவிட்டோம் என்று அரைகுறை முயற்சிகளுடன் வாழ்வது. உதாரணமாக எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்டால், என்ன பிழைப்பு சார் இது! என்பதை போன்றது.

வாழ்தல் என்பது முழு ஈடுபாட்டுடன் ஒவ்வொரு வினாடியும் முழு மனிதர்களாக வாழ்வது. முழுமனிதர்களாக வாழும் போது முழு ஈடுபாட்டுடன் வாழ்வோம். முழு ஈடுபாட்டுடன் வாழும் போது முழு மகிழ்ச்சியைக் கண்டுகொள்வோம். அப்பொழுது வாழ்வின் நிறைவைக் கண்டு கொள்வோம். இத்தகைய வாழ்வு இறைவனிடமிருந்தே வருகிறது.

நாமும் வாழ்க்கையை வாழும் போது நாம் கடவுளிடமிருந்து வந்தவர்கள் என்பதை நம்முடைய நற்செயல்கள் எடுத்துகாட்டுகின்றன. நமது சொல்லும், செயலும், சிந்தனைகளும், நாம் கடவுளிடமிருந்து வந்தவர்கள் என்பதற்கு சான்றாக அமைகின்றனவா? அப்படியென்றால் இந்த கடவுள் கொடுத்த வாழ்க்கையில் இருக்காமல், பிழைக்காமல், வாழ முற்படுவோம். ஏனென்றால் உண்ணுவதும், உறங்குவதும்தான் வாழ்க்கை என்றால் அதை மண்ணும் செய்யும், மரமும் செய்யும். நாம் மனிதர்கள். வாழப் பிறந்தவர்கள்.

காலைக்கதிர்
Kalaikkathir



# முகநூல் முடக்கப்பட்ட சம்பவமானது ஜனநாயகத்தில் கை வைக்கும் செயற்பாடு

மட்டக்களப்பு,மார்ச் 16

முகநூல் முடக்கப்பட்டமை ஜனநாயக சுதந்திரத்தில் கை வைக்கும் செயற்பாடு என்பதைக் கருத்தில்

கொள்ளவேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சுதந்திரன் பத்திரிகை வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 2 கோடி ரூபா பெற்றுக் கொண்ட சம்பவம் தொடர்பான பொய்யான தகவல்கள் தெரிவிக்கப்பட்டமையால் அக்காலத்தில்



மிகவும் கஷ்டமான நிலையை அனுபவித்தோம். அந்தப் பொய்கள் மக்களை வேகமாகச் சென்றடைவதற்கு இன்றைய ஊடகங்களின் விரிவாக்கமும் காரணமாகும்.

முகநூல்கள் என்பது முகமூடி நூல்களாக மாறிவிட்டன. ஒருவர் தனது எழுத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டும். தன்னுடைய முகத்தைக் காட்டவேண்டும். அந்த முகநூலில் முகம் தெரியவேண்டும்.

கண்டியில் நடைபெற்ற செயற்பாடுகளைத் தொடர்ந்து முகநூல்கள் முடக்கப்பட்டுள்ளன. இதனால் நல்ல பலாபலன்கள் கிடைத்துள்ளன எனக் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆனால் இது ஜனநாயகச் சுதந்திரத்தில் கை வைக்கும் செயற்பாடு என்பதையும் கருத்தில் கொண்டு சுதந்திரம் என்பது கட்டுப்பாடு இல்லாத ஒன்று அல்ல என்பதையும் கருத்தில் கொண்டு இந்த முகநூல் தொடர்பில் புதிய சட்ட விதிகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன என அறிகின்றோம்.

அவ்வாறு இருக்கும்போது ஒவ்வொருவரும் தனது முகநூல் கணக்கு தொடர்பில் வெளிப்படையாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மரை இறைச்சியுடன் ஒருவர் கைது

திருகோணமலை,மார்ச் 16

திருகோணமலை - அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 10 கிலோ மரை இறைச்சியை வைத்திருந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் கூறியுள்ளனர். கந்தளாய், தல்கஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேநகபர் நேற்றைதினம் கந்தளாய் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த உள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெண்களைத் தாக்கி விட்டு 15 பவுண் தாலி அபகரிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 16

மின்மானி வாசிப்பாளர்கள் என்ற போர்வையில் வீட்டிற்குள் நுழைந்த இளைஞர்கள் பெண்ணொருவரின் தாலியை அறுத்துச் சென்ற சம்பவம் காரைதீவில் பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மயில்வாகனம் இராஜேஸ்வரி எனும் பெண் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு:-

மூன்று இளைஞர்கள் மின்மானி வாசிப்பாளர்கள் என்று கூறி கதவைத் தட்டியுள்ளனர். இதன்போது வீட்டினுள் பெண்கள் இருவர் இருந்துள்ளனர்.

ஒரு பெண் கதவைத் திறக்க, வந்தவர்களுள் இருவர் உள்நுழைந்ததும் ஒருவர் வெளியே நின்றுள்ளார். உள்ளே றிப் 'சுவிற்ச்' பார்க்க வேண்டும் என்று கூறி இருவரும் அறைக்குள் நுழைந்துள் ளனர்.

இந்த நிலையில் ஒரு பெண்ணுக்கு சந்தேகம் வரவே அவர் கூச்சலிட்டுள்ளார். உடனே அந்த இளைஞர்கள் கொண்டு வந்த பொல்லால் பெண்களை தாக்கி விட்டு ஒரு பெண்ணின் கழுத்திலிருந்த 15 பவுண் தாலியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றுள்ளனர்.

இந்த நிலையில் அருகிலிருந்த வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி.சி. ரி.வி. கமராவில் மூவரும் தப்பிச் செல்லும் காட்சிகள் பதிவாகியுள்ளன. இந்த நிலையில் பொலிஸார் குறித்த காட்சிகளை வைத்துத் தேடுதலை மேற்கொண்டு வருகின்றனர்.

# விபத்தில் ஒருவர் படுகாயம்

திருகோணமலை,மார்ச் 16

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் சீனக் குடா நூலகத்துக்கு முன்னால் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் அவர் வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது -

திருகோணமலையில் இருந்து சென்ற மோட்டார் சைக்கிளின் முன், எதேச்சையாக நபரொருவர் வீதியைக் கடக்க முற்பட்ட போதே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்தில் படுகாயங்களுக்கு உள்ளானவர் கிண்ணியா தள வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சீனக் குடா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மட்டு . முத்தமிழ் விழா





மட்டக்களப்பு,மார்ச் 16

முத்தமிழ் விழாவும் தேனகம் மலர் வெளியீட்டு நிகழ்வும் மட்டக்களப்பு மகாஜனக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

நகர்ப்பகுதி என்ற காரணத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தின் பண்பாடு, கலை கலாசார விழுமியங்கள் எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற ரீதியில் 23ஆவது தடவையாக இந்த முத்தமிழ் விழா நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது, பல்துறை சார்ந்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிவாகை சூடிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டமையுடன் கலை கலாசார நிகழ்வுகளும் நடத்தப்பட்டுள்ளன.

மேலும் இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், கலைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.



# ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான விவாதங்கள் இன்று!



கொழும்பு, மார்ச் 16
இலங்கையின்மனிதஉரிமை விவகாரம் தொடர்பான காலக்கிரம மீளாய்வு விவாதம் இன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் நடைபெறவுள்ளது.

இதில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் முதலில் உரையாற்றதுடன் இதன் பின்னர் உறுப்பு நாடுகள் தமது நிலைப்பாடுகளை அறிவிக்கவுள்ளன.

அத்துடன், இலங்கையின் சார்பில் ஜெனீவாவிற்கான வதிவிடப்பிரதிநிதி இந்தவிவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

இதன்போது இலங்கையானது 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவாகச் செயற்பட வேண்டுமெனவும் அந்தப் பிரேரணையின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டு மென்றும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் வலியுறுத்தவுள்ளார் எனவும் இலங்கை விசேடபொறிமுறையொன்றை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்க வேண்டும் என வலியுறுத்தவிருக்கிறார்.

அதேபோன்று, சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளும் இலங்கை தொடர்பான இந்த விவாதத்தில் கலந்து கொண்டு இலங்கையானது பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்னெடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை நிலை நாட்டவேண்டுமென வலியுறுத்தவுள்ளனர்.

இதேவேளை, இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ள ஜெனீவாவிற்கான இலங்கைப் பிரதிநிதி இலங்கையானது கடும் சவால்களுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பகரமான முறையில் நீதியை வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கவிருக்கிறார்.

கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமான ஜெனீவா மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இலங்கை தொடர்பான மற்றுமொரு விவாதம் எதிர்வரும் 21 ஆம் திகதி மனித உரிமை பேரவையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## உள்ளூராட்சி நிறுவன புதிய உறுப்பினரின் பெயர் அடங்கிய வர்த்தமானி விரைவில்!

கொழும்பு, மார்ச் 16
உள்ளூராட்சித் தேர்தல் மூலம் தெரிவான புதிய அங்கத்தவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

பெண் பிரதிநிதித்துவம் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.எல்.ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய உள்ளூராட்சி நிறுவனங்களின் பதவிக்காலம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகவுள்ளது என அவர் கூறினார். அரச அச்சகர் கங்கானி கல்பனா லியனகே இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில்–

புதிய உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை விரைவில் வெளியிட முடியும். தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

## ஏப்ரல் மாதத்தில் புத்தாண்டு பஞ்சாங்கம் ஜனாதிபதி மைத்திரியிடம் கையளிப்பு!

கொழும்பு, மார்ச் 16
தமிழ், சிங்களப் புத்தாண்டு தொடர்பான சுபநேர பஞ்சாங்கம் ஏப்ரல் மாதம் முதல்வாரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இது தொடர்பிலான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனக் கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் திருமதி அனுஷா கோகுல பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

(க)

## ஆயுள்வேத திணைக்களத்தின் அதிகாரிகள் இருவர் கைது!



கொழும்பு, மார்ச் 16
லஞ்சம் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில் மகரகம ஆயுள்வேத திணைக்களத்தின் அதிகாரிகள் இரண்டு பேர் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மகரகம ஆயுர்வேத திணைக்களத்தில் பணியாற்றும் சட்ட அதிகாரி ஒருவரும் ஆயுள்வேத வைத்தியர் ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

50 ஆயிரம் ரூபா பணத்தை லஞ்சமாகப் பெற்றுக்கொண்ட குற்றத்தில் மஹரகம ஆயுள்வேதத் திணைக்களத்தின் அலுவலகத்தில் வைத்து இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுள்வேத உற்பத்தி நிறுவனம் ஒன்றின் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்காகச் சந்தேகநபர்களால் மூன்று லட்சம் ரூபா லஞ்சமாகக் கோரப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், அந்தத் தொகை இரண்டரை லட்சமாகக் குறைக்கப்பட்டு, அதன் முதல் கட்டமாக 50 ஆயிரம் ரூபா லஞ்சத்தைப் பெற்றுக் கொள்ளும்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



## பொலிஸ் கலாசார பிரிவிற்கு புதிய பயிற்சிக் கட்டடம் திறப்பு!

கொழும்பு, மார்ச் 16
கொழும்பு 7 மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள பொலிஸ் கலாசார பிரிவு வளாகத்தில் புதிய பயிற்சிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாடும் நிகழ்வு பொலிஸ்மா அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இரண்டு மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ள இந்தப் பயிற்சி கட்டடமானது 19 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை 5 மாதக் குறுகிய காலப்பகுதியில் நிறைவடையச் செய்ய எதிர்பார்த்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் போக்குவரத்து மற்றும் மேல்மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்க, பொலிஸ் கலாசார பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பேராசிரியர் கருணாரத்ன பண்டார உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## அபிவிருத்தித் திட்டங்களில் பல மக்கள் பாவனைக்கு கையளிப்பு!

படையினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பல மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவின் அமைச்சுக்கு உட்பட்ட தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்காக 654 மில்லியன் ரூபா நிதியைச் செலவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் தையிட்டி, மயிலிட்டி, வறுத்தலைவிளான், பலாலி, சண்டிலிப்பாய் பிரதேசங்களில் படையினரால் கட்டம் கட்டமாக அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் 19 உள்ளக வீதிகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இதில் 11 வீதிகள் கடந்த 5 ஆம் திகதி மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டன. இதற்கான செலவினம் 51 மில்லியன் ரூபா எனத் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வி.சிவஞான சோதி தெரிவித்தார்.

பலாலி தெற்கு வீட்டுத் திட்ட உள்ளக வீதி, தாழையடி வீதி, குகன் வீதி, வைரவர் உள்ளக வீதி, சிவன் உள்ளக வீதி, வேலன் உள்ளக வீதி உள்ளிட்ட பல வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு கடந்த காலங்களில் மீளக்குடியமர்த்தப்பட்ட பலாலி வடக்கு, ஊறணி, பொலிகண்டி மற்றும் அராலி ஆகிய இடங்களிலும் இறங்கு துறை மற்றும் படகு கட்டும் இடங்களுக்குமாக 296 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு கரவெட்டி வேதாரணிய வித்தியாலயத்திற்கு இதன் கீழ் 2 மாடிக் கட்டடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. யாழ். வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரிக்கு கணினி ஆய்வுகூட அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கும் நிதி செலவிடப் பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நெகிழும் தன்மையுடன் கூடிய செயற்கை கால்களை தயாரிப்பதற்கான கற்கை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 9 மில்லியன் ரூபா செலவில் நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வி.சிவஞான சோதி தெரிவித்துள்ளார்.

# மூன்றில் இரண்டு ஆதரவு கிடைத்தால் தேர்தல் என்கிறார் அமைச்சர் பைஸர்!

மாகாணசபை எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டால் கூடிய விரைவில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த தயாராக இருக்கின்றேன் என மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி இது தொடர்பான நாடாளுமன்ற விவாதமும் வாக்கெடுப்பும் நடத்தப்பட இருக்கிறது. எல்லை நிர்ணயம் தொடர்பில் மேன் முறையீடு செய்ய எந்தக் குழுவும் அமைக்கப்படாது. நாடாளுமன்றத்திலேயே தேவையான திருத்தங்களைச் செய்ய முடியும் எனவும் கூறியுள்ளார்.

# இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகர ஓய்வு

இலங்கை இராணுவத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகர, கடந்த செவ்வாயன்று ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இதையடுத்து இராணுவத்தின் இரண்டாவது நிலைத்தள பதிப் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இலகு காலாட்படையைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகர, கடந்த 2017 ஜூலை 21 ஆம் திகதி, இலங்கை இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

ஓய்வுபெற்றுச் செல்லும் மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகரவுக்குப் பனாகொடவில் உள்ள இலகு காலாட்படைத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் பிரியாவிடை அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

இவர் இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இவர் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளராக இருந்த போதே, 'தசண்டே லீடர்', ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை இடம்பெற்றிருந்தது.

இந்தக் கொலை தொடர்பாக, மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகரவிடம் அண்மையிலும் விசாரணை நடத்தப்பட்டது, இவர் கைது செய்யப்படவுள்ளார் என்றும் தகவல் பரவியமை குறிப்பிடத்தக்கது.

மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகர ஓய்வு பெற்றமையை அடுத்து இராணுவத் தலைமை அதிகாரி பதவிக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு, இன்னமும் யாரும் நியமிக்கப்படவில்லை.

இலங்கை இராணுவத்தில் உள்ள மூன்று மூத்த மேஜர் ஜெனரல்கள் இந்தப் பதவிக்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரி நாடு திரும்பியதும், இவர்களில் ஒருவர் இராணுவத்தலைமை அதிகாரியாக நியமிக்கப்படுவர்.

# தினசரி ராசி பலன் (16.03.2018)

*2018 ஆம்ஆண்டு ஏவிளம்பி வருடம் பங்குனித்திங்கள் 2 ஆம் நாள் வெள்ளிக்கிழமை சதுர்த்தசித்திதி மாலை 6.18 மணி வரை பின்னர் அவாமாசை. நட்சத்திரம். சதயம் மாலை 6.44 மணி வரை பின்னர் பூரட்டாதி. சித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *பகல் 10.49 மணி முதல் 12.19 மணி வரை*

**சுபநேரம்** - *காலை 6.15 மணி முதல் 7.45 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *பங்குனி மாத தேய்பிறை சதுர்த்தசி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *சதயம்*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். நினைத்த காரியங்கள் ஈடேறும். இதுவரை கோபமாய் இருந்தவர்கள் நட்புடன் பழகுவார்கள்.

**ரிஷபம்** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் நல்லுறவு நீடிக்கும். வியாபாரம் நன்கு அபிவிருத்தியடையும். மாணவர்கள் கல்வியில் மேம்பாடடைவார்கள்.

**மிதுனம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். எண்ணியது நிறைவேறும். நண்பர்களால் நன்மை வரும். அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும். கொடுத்த பணம் வசூலாகும்.

**கடகம்** சஞ்சலமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் குழப்பம் உண்டாகும். பிள்ளைகளால் செலவுகளும், தொல்லைகளும் உண்டாகும். தேக நலம் பாதிப்படையும். திட்டமிட்ட பயணங்கள் தள்ளிப் போகும்.

**சிம்மம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். வைத்தியச் செலவுகள் உண்டாகும். வீணான அலைச்சல்களால் விசனம் வந்து சேரும். தொழிலில் கடின உழைப்பு இருக்கும்.

**கன்னி** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். புத்திரர்களால் மேன்மை வரும். மாணவர்கள் கல்வியில் முதன்மை அடைவார்கள்.

**துலாம்** மகிழ்ச்சியான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உறவினர்கள், நண்பர்களின் சகாயம் கிடைக்கும். தொலைந்து போன பொருள்கள் திரும்பக் கிடைக்கும்.

**விருச்சிகம்** சலனம் மிகுந்த நாள். தொழில் ரீதியான போட்டிகள் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு, சலுகைகள் போன்றவற்றைப் பெறுவதில் தடை, தாமதங்கள் ஏற்படும்.

**தனுசு** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். தொழிலில் சுமாரான பயன்கள் கிடைக்கும். உத்தியோகத்தர்கள் தொழிலில் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

**மகரம்** அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வீட்டில் விஷேசங்கள் நடக்கும். பழைய உறவுகளைப் புதுப்பித்தி புத்துணர்ச்சி அடைவார்கள்.

**கும்பம்** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். எண்ணிய காரியங்கள் துல்லியமாய் நிறைவேறும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி நிலவும்.

**மீனம்** யோசனையான நாள். வருமானம் குறைவடையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். உறவினர்கள் தொல்லைகள் அதிகரிக்கும். தொழிலில் அலைச்சல்களும் பிரச்சினைகளும் உண்டா-கும்.

**சந்திராட்டம நாள்: புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# உடன்பாட்டை சீனா மீறுவதற்கு இலங்கை அரசு அனுமதிக்காது

கொழும்பு, மார்ச் 16

சீனாவின் ஒரு பாதை, ஓர் அணை பொருளாதார முயற்சி, சர்வதேச சமூகத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்த இடமளிக்கக் கூடாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ளசெவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒரு பாதை ஓர் அணைத்திட்டம் ஏனைய நாடுகளுக்கு எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாது என பதில் சீனா தெளிவாக இருக்க வேண்டும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனா தனது இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும் என்ற கவலைகளை என்னால் புரிந்து கொள்ளமுடிகிறது.

எனினும், அவ்வாறு இரு தரப்பு உடன்பாட்டை மீறுவதற்கு எமது அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரச நாடக விழா எதிர்வரும் 27 இல்



கொழும்பு, மார்ச் 16

அரச நாடக விழா எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பு நெலும் பொக்குண தலையரங்கில் மாலை 6 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதற்கான நாடக தெரிவுகள் விரைவில் இடம் பெறவுள்ளன.

சர்வதேச பொம்மலாட்ட மற்றும் கவிதைப் போட்டி தினம் இம்மாதம் 21 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு விசேட வைபவம் ஒன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# 'முட்டிக் கத்தரிக்காய்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஆசி கந்தராஜாவின் செல்லப் பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய் என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. ஆசியுரையை கலாநிதி ஆறு திருமுகன், நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் நா. சண்முகலிங்கன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். முதற்பிரதியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாவரவியல் துறைத் தலைவர் பேராசிரியர் செவ்வேள் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

ஆய்வுரையை திருமதி கோகிலா மகேந்திரன் மற்றும் கவிஞரர் சோ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமைகாலை 8 மணியிலிருந்து மாலை 5மணி வரை –

**கிளிநொச்சி பிரதேசத்தில்** - யூனியன் குளத்திலும் –

**வவுனியா பிரதேசத்தில்** - கணேசபுரம் கிராமம், நேரியகுளம், இலுப்பைக்குளம், அழகாபுரி, துட்டுவாகை, சின்னசிற்பிக்குளம், முதலியார்குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம், கிறிஸ்தவகுளம், மெனிக்பாம், ஆண்டியபுளியங்குளம், பீடியா பாம், கஜசிங்கபுர இராணுவ முகாம், மெனிக்பாம் வலயம் 3- 2, 2, சக்திகம, மல்வத்து ஓயா, மெனிக்பாம் வலயம் 4 ஆகிய இடங்களிலும்–

**மன்னார் பிரதேசத்தில்** - நீராவிபுரம், கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் - மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

# முன்பள்ளி மெய்வன்மைப்போட்டி

வட்டுக்கோட்டை, மார்ச் 16

மூளாய் இந்து இளைஞர் மன்ற மாதிரி முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் சி.ஜனார்த்தனன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த விளையாட்டு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சபா. குகதாஸ், சிறப்பு விருந்தினராக முன்பள்ளி இணைப்பாளர் சி.சத்தியரூபி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த வாரம் செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட வலுக்கட்டமாகக் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டத்தின் மீது – நாடாளுமன்றத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஆற்றிய உரையின் தொகுப்பு இது.

# காணாமலாக்கப்பட்டோர் பற்றிய விசாரணை சர்வதேச பங்களிப்புடன் நடைபெற வேண்டும்

## நாடாளுமன்றில் ஸ்ரீதரன் வலியுறுத்து

இந்த நாட்டிலே வலுக்கட்டாயமாகக் காணாமலாக் கப்பட்டவர்கள் சம்பந்தமான விடயங்களை வெளியிலே கொண்டுவருவதற்கான சர்வதேச சமவாயச் சட்டமூலம் இந்தச் சபையிலே சமர்ப்பிக்கப்பட்டதையிட்டு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேநேரம் இதனைக் கொண்டுவருவதற்குக் கிட்டத்தட்ட இரண்டரை வருடங்கள் எடுத்திருக்கிறது என்பது மிகவும் கவலைக்குரியது. இந்த நாட்டிலே அதிகமானோர் வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டார்கள்.

வடக்கு, கிழக்குவாழ் தமிழர்கள் 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமக்கு நடந்த அநீதிகளுக்கு எதிராக மனித நேயத்தோடும் ஜனநாயக முறைப்படியும் முன்னெடுத்த போராட்டங்கள் எல்லாம் ஆயுத முனையில் அடக்கப்பட்டன; அந்த மக்கள் ஆயுத ரீதியாகத் தாக்கப்பட்டனர்; அந்தநேரத்தில்தான் அவர்கள் துப்பாக்கிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அந்த நிலைமையை அரசுதான் அவர்கள்மீது திணித்தது. அதன் பின்னர் நீண்ட பெரும் போராட்டத்துக்கு மத்தியில் 2009ஆம் ஆண்டிலே பல்லாயிரக் கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள்; ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போனார்கள். இந்த நாட்டிலே இதனை விசாரிப்பதற்காகப் பல்வேறுபட்ட ஆணைக் குழுக்களை அரசாங்கம் நியமித்தது. குறிப்பாக தமிழர்கள் மீதான ஓர் இனப்படுகொலையை மேற்கொண்ட மஹிந்த ராஜபக்ஷவும் அவருடைய சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவும் இந்த நாட்டிலே செய்த அதிபயங்கரமான யுத்தம் மற்றும் கொடூரமான கொலைகளினால் பல்வேறுபட்டவர்களும் காணாமலாக்கப்பட்டார்கள்.

மக்கள் முள்ளிவாய்க்காலிலிருந்து வவுனியாவுக்கு வந்தபோது, 'நீங்கள் சரணடையுங்கள்! உங்களை விடுவிக்கிறோம்!' என ஒலிபெருக்கிமூலம் அறிவிக்கப்பட்டபோது, இராணுவத்திடம் நேரடியாக ஒப்படைக்கப்பட்ட பலருடைய நிலைமை இன்றும் கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. இந்த விடயங்கள்பற்றிக்கண்டறிவதற்குத்தான்அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் முதன்முதலில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை நியமித்தது. இருந்த போதிலும் அந்த நல்லிணக்க ஆணைக்குழு முன் மக்கள் சென்று சுதந்திரமாகத் தங்களுடைய வாக்குமூலங்களை அளிக்க முடியாதவாறு, அந்த நேரத்தில் இராணுவப் புலனாய்வாளர்களும் பொலிஸ் புலனாய்வாளர்களும் இலங்கையிலுள்ள ஏனைய புலனாய்வாளர்களும் தெருக்களிலே வைத்து அந்த மக்களைத் தடுத்தார்கள்.

அதாவது, குறித்த ஓர் இடத்திலே வாக்குமூலம் பெறப்படுகின்றது என்றால், இன்னோர் இடத்தில் கொட்டகைகள் அமைத்து இங்கேதான் வாக்குமூலம் பெறப்படுகின்றது என்று அந்த மக்களிடம் கூறி, அவர்களை அங்கு செல்லவிடாது தடுக்கப்பட்டதன்மூலம் அவர்களின் வாக்குமூலங்கள் வேறு திசைகளில் சிதறடிக்கப்பட்டன. இவ்வாறான நிலைமையிலும் நல்லிணக்க ஆணைக் குழுவின் நீதிபதிகள் கொடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த 200 இற்கும் மேற்பட்ட விடயங்களில் நான்கு விடயங் கள் முக்கியமானவையாக இருக்கின்றன.

அதாவது, இந்த நாட்டிலே இனரீதியான யுத்தம் நடந்திருக்கிறது; அந்த யுத்தத்தின் காரணமாக இந்த மக்கள் கொன்றொழிக்கப்பட்டிருக்கின்றார்கள்; அவர்களுக்கு நீதியான விசாரணை வேண்டும்; அதேநேரம், இந்த நாட்டிலே இருக்கின்ற இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்; இந்த நாட்டிலே நடந்திருக்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வைச் சரியான முறையில் அணுக வேண்டும்



என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இந்த விடயங்களைக் கூட அரசாங்கம் கிஞ்சித்தும் தன்னுடைய கவனத்திலே எடுக்கவில்லை. பின்னர் மேலும் ஏமாற்றுவதற்காக முன்னாள் நீதிபதி மக்ஸ்வெல் பரணகம தலைமையிலே ஜனாதிபதி ஆணைக்குழுவை உருவாக்கியது. ஆனால், இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவானது மக்களிடம் விசாரணை செய்த நேரத்தில், உங்களுக்கு ஆடு தரவா? கோழி தரவா? என்று இளக்காரமான முறையில் கேட்டதே தவிர, சரியான முறையில் நீதியைத் தரவில்லை.

இவற்றையெல்லாம் கடந்து 2011- 2015 வரையில் ஜெனீவாவில் இடம் பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைவாக, 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜெனீவாப் பிரகடனத்தின் 30(1)இன் கீழுள்ள சகல விடயங்களையும் இலங்கை ஏற்றுக்கொண்டது. அப்பொழுது வெளிநாட்டமைச்சராக இருந்த கௌரவ மங்கள சமரவீர அவர்கள் காணாமற்போனோர் தொடர்பில் காரியாலயம் அமைக்கின்றோம், அவர்கள் தொடர்பில் உடனடித் தீர்வைக் கொண்டு வருகின்றோம், அவர்களைக் கண்டு பிடித்து உறவினர்களிடம் ஒப்படைக்கின்றோம், நீதியை வழங்குகின்றோம் என்றெல்லாம் கூறினார்.

ஆனால், இரண்டரை வருடங்கள் கடந்தும் இதுவரை அந்த நீதி நிலைநாட்டப்படவில்லை. இந்த நிலையில் இன்றைய நாளில் இந்தச் சட்டமூலம் விவாதிக்கப்படுகின்றது. அதற்கான ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் எங்கே குறித்த அலுவலகம் அமையும்? கொழும்பிலே அமைந்தால், வடக்கிலும் கிழக்கிலும் இருக்கின்றவர்கள் கொழும்புக்கு வந்து உரிய சாட்சியங் களையும் மற்றும் விடயங்களையும் முன்வைப்பார்கள்? எனவே, வடக்கி லும் கிழக்கிலும் காணாமற்போனோர் பற்றிய அலுவலகங்கள் குறைந்தது நான்கையேனும் நிறுவி, அங்கு அந்த மக்கள் யாருடைய இடைஞ்சலும் இல்லாமல் – குறிப்பாக புலனாய்வுத் துறையினருடைய இடைஞ்சல்கள் இல்லாமல், சர்வதேச மேற்பார்வையோடு சுதந்திரமாகத் தங்களுடைய சாட்சியங்களை அளிப்பதற்கு வழிசெய்ய வேண்டும்.

இதிலே சர்வதேசத்தினுடைய கவனிப்பு மிகமிக முக்கியம். குறிப்பாக, அமெரிக்கா கூடிய கரிசனையைச் செலுத்த வேண்டும்; பிரித்தானியா அதன் கரிசனையைக் காட்ட வேண்டும்; இந்தியா தன்னுடைய பங்களிப்பை வழங்க வேண்டும்.

இந்த விடயத்திலே வெளிப்படையான விசாரணை நடைபெறுவதற்கு ஐரோப்பிய நாடுகள் உதவ வேண்டும். 'Fire zone' என்று சொல்லப்படுகின்ற இடத்திலிருந்து போர்நிறுத்தம் செய்யப்பட்ட வலயங்களுக் குள் செல்லுமாறு மக்களிடம் கூறப்பட்டதன் பின்னர் அங்கு கொல்லப்பட்ட மக் களுக்கு மற்றும் காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

தங்களுடைய பிள்ளைகளை ஒப்படைத்த பெற்றோர், கணவனை ஒப்படைத்த மனைவிமார், தங்களுடைய தாய், தந்தையரை ஒப்படைத்த பிள்ளைகள் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் போராட்டத்திற்கு ஒரு வருடம் முடிந்திருக்கின்றது. ஆனால், இந்த நாட்டிலே யாருடைய கண்ணுக்கும் அவர்களின் நிலைமை தெரியாதிருப்பது நியாயமல்ல. அவர்களுக்கு அதற்கான நீதி இன்னமும் கிடைக்காமையால் தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே, இவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால் சர்வதேசத்தினுடைய மேற்பார்வையின் கீழ், சர்வதேச சமூகத்தினுடைய பிரசன்னத்தோடு இந்த விடயம் விசாரிக்கப்பட்டு நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று நான் குறிப்பிடுகின்றேன். ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா இந்த விடயங்களிலே மேன்மேலும் – கூடுதலாகத் தங்களுடைய கரிசனையைக் காட்டவேண்டும் என்பதைத்தான் நாங்கள் வலியுறுத்துகின்றோம். மிக முக்கியமாக, இவ்வாறு காணாமற்போனவர்களுடைய குடும்பங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். குறிப்பாக வண. பிதா பிரான்ஸிஸ்அவர்களுடைய தலைமையிலே 48 இற்கும் மேற்பட்டவர்கள் சரணடைந்திருந்தார்கள். அவர்களைக் கொண்டுசென்ற வாகனம் எங்கே? அவர்கள் எங்கே?

விடுதலைப் புலிகளினுடைய மூத்த உறுப்பினர் பாலகுமாரனுடைய மகன் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்ததற்கான சான்றுகள் இருக்கின்றன. அந்த அடையாளங்களை Lanka Guardian பத்திரிகை வெளியிட்டது, BBC செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன் தன்னுடைய twitter இலே வெளியிட்டிருந்தார். இவையெல்லாம் நடந்தும்கூட இந்த நாட்டிலே நீதி கிடைக்கவில்லை. சரணடைந்த புலித்தேவனும் அவரோடு சென்ற அரசியல் பொறுப்பாளர் நடேசனும் கொல்லப்பட்டார்கள்.

இவ்வாறாக மிகுந்த அநியாயங்கள் இந்த நாட்டிலே நடந்தன. மிகக் கொடூரமாக நடந்த அந்த யுத்தத்திலே அந்த மக்கள்மீது யுத்தக் குற்றங்கள் புரியப் பட்டன. மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள் குறிப்பிட்டதுபோல 2009ஆம் ஆண்டிலே 1,40,000க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் காணாமற்போயும் இருக்கின்றார்கள்.

எனவே, அரசாங்கம் 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சர்வதேசச் சட்ட வல்லுநர்களின் நீதியாளர்களின் உதவிகளை ஏற்றுக்கொள்வதாகக் கூறியதன் பிரகாரம், இதனை விசாரித்து அந்த மக்களுக்கு நீதியை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"இந்த நாட்டிலே இனரீதியான யுத்தம் நடந்திருக்கிறது; அந்த யுத்தத்தின் காரணமாக இந்த மக்கள் கொன்றொழிக்கப்பட்டிருக்கின்றார்கள்; அவர்களுக்கு நீதியான விசாரணை வேண்டும்; அதேநேரம், இந்த நாட்டிலே இருக்கின்ற இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்."

# கண்டிக் கலவரம் பின்னணி என்ன? சூத்திரதாரிகள் யார்?

முரளீதரன் காசி விஸ்வநாதன்

கண்டி கலவரங்கள் நடந்து ஒருவாரம் கழிந்துவிட்ட நிலையில், தங்கள் வாழ்வை மீட்டெடுக்கும் நடவடிக்கையில் இஸ்லாமியர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆனால், இதுபோன்ற கலவரங்கள் தொடரக்கூடுமோ என்ற அச்சமும் அவர்களிடம் காணப்படுகிறது. இந்தக் கலவரம் எப்படித் தொடங்கியது, பின்னணி என்ன?

கண்டியின் பலகெல்ல பகுதியிலும் தெல்தெனிய பகுதியிலும் எரிக்கப்பட்ட தங்கள் கடைகளைச் சரிசெய்யும் பணிகளை இஸ்லாமியர்கள் தொடங்கியுள்ளனர். முதற்கட்டமாக அரசாங்கம் ஒரு லட்சம் ரூபா தருவதாகவும் பிறகு, இழப்பீட்டை மதிப்பீடு செய்து பிறகு உரிய நிவாரண உதவிகளைச் செய்வதாகவும் அறிவித்திருக்கிறது.

"இதெல்லாம் எந்த மூலைக்கு? சாதாரணமாகச் சுத்தப்படுத்தும் வேலைக்கே இந்த ரூபாய் போதாது. என் கடையில் மட்டும் சுமார் ஒரு கோடியே 75 லட்சம் ரூபா மதிப்பிலான பொருள்கள் சேதமடைந்திருக்கின்றன. அதை அரசு தருமா?"– என்கிறார் தன் பலசரக்குக் கடையை இழந்த முகமது யூசுஃப்.

பல்லேகல்லவில் உள்ள லாஃபிர் ஜும்மா மசூதி முழுமையாகச் சேதமடைந்திருக்கிறது. இங்குள்ள பொருள்கள் முழுமையாக எரிக்கப்பட்டுவிட்டன. இனிமேல், இங்கு தொழுகை நடத்த முடியாது. அதனால், "பக்கத்தில் உள்ள ஓர் இடத்தைச் சீரமைத்து, அதில் தொழுகை நடத்துவோம். விரைவிலேயே பழைய பள்ளிவாசலை இடித்துவிட்டு புதிய பள்ளிவாசலைக் கட்டத் திட்டமிட்டிருக்கிறோம்."– என்கிறார் மௌலவி முர்ஷித்.







இந்தக் கலவரத்தில் வீடுகளை இழந்தவர்களின் நிலைதான் மிக மோசம். எங்காவது சொந்தக்காரர்களின் வீடுகளில் தஞ்சமடைய வேண்டிய நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

முகமது தயூப் போன்ற பலருக்கு கடையைச் சுத்தம்செய்யக்கூட கையில் பணம் இல்லை.

இதைவிட மோசம், இந்தப் பகுதியில் உள்ள அனைவருமே பொலிஸ் மீதும் அரச அமைப்பின் மீதும் முழுமையாக நம்பிக்கை இழந்திருப்பதுதான். "கலவரத்திற்கு முன்பாக நான்கைந்து பொலிஸார் இங்கே நின்றார்கள். கலவரம் தொடங்கியதும் அவர்கள் நகர்ந்துவிட்டார்கள். முறைப்பாடுகொடுத்தாலும் ஏற்கவில்லை. பிறகு இரண்டு, மூன்று நாள்கள் கழித்துத்தான் வந்து விசாரித்தார்கள். இந்த நிலையில், இந்த பொலிஸை எப்படி நம்புவது?" என்கிறார் இந்தப் பகுதியைச் சேர்ந்த ரஹீம்.

### பிரச்சினையின் தொடக்கம் எது?

கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி நடந்த ஒரு சிறிய விபத்தில் தொடங்கியது இந்தப்பிரச்சினை. கண்டியின் தெல்தெனிய பகுதியில் ஒரு லொறியும் ஆட்டோவும் மோதிக்கொண்டன. இதையடுத்து ஏற்பட்ட வாய்த் தகராறில் ஆட்டோவில் வந்த நான்கு இளைஞர்கள் லொறியை ஓட்டிவந்தவரை கடுமையாகத் தாக்கினர். லொறியின் ஓட்டுநர் சிங்களவர். ஓட்டோவில் வந்தவர்கள் முஸ்லிம்கள். கடுமையாகக் காயமடைந்த லொறி ஓட்டுநர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். இளைஞர்கள் நான்கு பேரும் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டனர்.

சுமார் இரு வாரங்கள் மருத்துவமனையில் இருந்த அந்த லொறி ஓட்டுநர், கடந்த மார்ச் 3ஆம் திகதியன்று உயிரிழந்தார். மார்ச் 4ஆம் திகதி மாலைக்கு மேல் சிறிது சிறிதாக பிரச்சினைகள் தெல்தெனியவில் உருவாக ஆரம்பித்தன. இஸ்லாமியரின் சொத்துகள் தாக்கப்பட்டன, எரிக்கப்பட்டன.

மார்ச் ஐந்தாம் திகதி, கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்களை தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென பொலிஸ் நிலையத்தை கும்பல் ஒன்று முற்று கையிட்டது. அன்று பிற்பகலில்தான் மிகப் பெரிய கலவரங்கள் தொடங்கின.

இறந்த ஓட்டுநரின் உடல் அடக்கம் செய்யப்பட்டு விட்ட நிலையில், அவரது உடல் திகண பகுதிக்கு ஊர்வலமாக கொண்டு வரப்பப்போவதாக வதந்திகள் பரவின. இங்கு பதற்றம் ஏற்பட்டது. "கடைகளையெல்லாம் அடைத்துவிடும்படி எங்களிடம் சொன்னார்கள். நாங்களும் கடைகளை அடைத்துவிட்டு வீடுகளுக்குள் முடங்கிக் கொண்டோம்" – என்கிறார் பல்லேகல்லவைச் சேர்ந்த மௌலவியான முர்ஷித்.

பொலிஸார் பெரிதாக கண்ணில் படவில்லை என்கிறார்கள் பல்லேகல்லவைச் சேர்ந்தவர்கள். இந்த நிலையில் பிற்பகல் ஒரு மணியளவில் திகணவின் மையப்பகுதியில் பெரிய அளவில் கூட்டம் குவியத் தொடங்கியது. மெல்ல மெல்ல அந்தக் கூட்டம் பல்லேகல்லவை நோக்கி நகர்ந்தது. பிற்பகல் 2.30 மணியிலிருந்து 2.45 மணிக்குள் தாக்குதல் தொடங்கியது. இஸ்லாமியரின் கடைகள், வழிபாட்டுத் தலங்கள் குறிவைத்தது துத் தாக்கப்பட்டன. சில இடங்களில் இஸ்லாமியரின் வீடுகளும் தாக்கி, எரிக்கப்பட்டன.

ஆனால், இந்தத் தாக்குதலில் உயிர்ச் சேதம் ஏற்படுத்துவது கலவரக்காரர்களின் நோக்கமாக இருக்கவில்லை. இஸ்லாமியர்களின் சொத்துக்களைச் சேதப்படுத்துவது மட்டுமே இலக்காக இருந்தது. பல்லேகல்லவில், தாக்குதல் தொடங்கியதும் தன் கடைக்குள் புகுந்து ட்டரை இறக்கி விட்டுக்கொண்டார் ஒரு பெண்மணி. கலவரக் கும்பல் ஷட்டரைத் திறந்து, அந்தப் பெண்மணியை வெளியே இழுத்துப் போட்டுவிட்டு கடைக்குத் தீவைத்தது.

ஆனால், பாஸிக்கு அந்த அதிர்ஷ்டம் கிடைக்கவில்லை. பல்லேகல்லவில் ஒரு செருப்புக் கடையை வைத்திருக்கிறார் ரஹீம் சும்சுதீன். செருப்புக் கடைக்குப் பின்னாலேயே அவரது வீடும் இருந்தது. கலவரம் தொடங்கும்போது ரஹீம் சம் சுதீன், அவரது மனைவி, அவரது இரு மகன்கள் அந்த வீட்டில் இருந்திருக் கின்றனர். இவர்களில் பாஸி மாடியில் இருந்தார். கலவரக்காரர்கள் செருப்புக் கடைக்குத் தீ வைக்கவும் ரஹீம் சம் சுதீன், அவரது மனைவி, கீழே இருந்த மகனான பயாஸ் ஆகியோர் வெளியேறி விட்டனர். இதில் பயாஸுக்கு கடுமையான தீக் காயம் ஏற்பட்டது. மேலே பாஸி இருந்தார் என்பதை யாரும் அறியவில்லை. கலவரங்கள் முடிந்து, மேலே போய் பார்த்தபோது பாஸி உயிரிழந்து கிடந்தார். அவர் புகையில் மூச்சுத் திணறி இறந்தார் எனக் கருதப்படுகிறது. இந்தக் கலவரத்தில் உயிரிழந்தவர் பாஸி மட்டும்தான்.

### அம்பாறை வதந்தியும் கலவரமும்

இந்த கண்டி கலவரங்களுக்கு முன்பாகவே, ஒரு பெரிய இனமோதலுக்கான சூழல் உருவாகிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். பெப்ரவரி 26ஆம் திகதி இரவு, கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறையின் டி.எஸ். சேனநாயக்க சாலையில், இஸ்லாமியருக்குச் சொந்தமான கடை ஒன்றில் பரோட்டா சாப்பிட்டுக்கொண்டிருந்த சிங்களவர் ஒருவர், அந்த பரோட்டாவினுள் வேறு ஏதோ பொருள் இருக்கின்றது எனவும்



அந்தப் பொருள், மலட்டுத் தன்மையை ஏற்படுத்தக்கூடிய மருந்து என்றும் குற்றஞ்சாட்டினார். இதையடுத்து கடையின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டார்.

இதற்கிடையில், ஆண்களுக்கு மலட்டுத்தன்மை ஏற்படுத்தும் பொருளை (சிங்களத்தில் வந்தபெத்தி) பரோட்டாவில் கலந்தததார் எனக் கடை உரிமையாளர் கூறும் வீடியோவும் சமூக வலைதளங்களில் வெளியானது. இந்த வீடியோ, வலுக்கட்டாயப்படுத்தி எடுக்கப்பட்டது என்பது பிறகு தெளிவுபடுத்தப்பட்டது. ஆனால், இதற் கிடையிலேயே அம்பாறையில் இஸ்லாமியர்களின் கடை கள், வழிபாட்டுத்தலங்கள் தாக்கப்பட்டன. பிறகு, அம்மாதிரி மருந்து ஏதும் உணவில் கலக்கப்படவில்லை என்பது ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டது.

நீண்ட காலமாகவே, இஸ்லாமியர்களின் மீது இம்மாதிரியான குற்றச்சாட்டுகளை சிங்களவர்கள் முன்வைத்து வருகின்றனர். இஸ்லாமியர் நடத்தும் சாப்பாட்டுக் கடைகளில் வந்த பெத்தியை வைப்பதாகவும் முஸ்லிம்கள் நடத்தும் ஜவுளிக் கடைகளில் உள்ளாடைகளில் ஏதோ ஒரு பொருளை வைத்து மலட்டுத்தன்மையை ஏற்படுத்துவதாகவும் கூட வதந்திகளைப் பரப்பி, எங்கள் தொழிலை முடக்கப்பார்க்கின்றனர். அதன் தொடர்ச்சி தான் இது"– என்கிறார் மௌலவி முர்ஷித்.

மார்ச் ஐந்தாம் திகதி மாலையே கண்டியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த உத்தரவெல்லாம் முஸ்லிம்களுக்குத்தான். தாக்குதல்காரர்கள் தொடர்ந்தும் தாக்குதல் களை நடத்தினார்கள் என்கிறார் சம்சுதீன். இதற்குப் பிறகு, ஆங்காங்கே தாக்குதல்கள் தொடர்ந்த நிலையில், மார்ச் ஆறாம் திகதி, 10 நாள்களுக்கு அவசர நிலையைப் பிரகடனம் செய்தது இலங்கை அரசு.

வாட்ஸ்ஆப், ஃபேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களின் பயன்பாடும் தடைசெய்யப்பட்டது.

இந்த வன்முறைச் சம்பவங்களின் ஒட்டுமொத்தமாக 445 வீடுகள், கடைகளும், 24 பள்ளிவாசல்களும், 65 வாகனங் களும் சேதமடைந்துள்ளன எனவும் 28 பேர் காயமடைந்துள்ளனர் என இருவர் உயிரிழந்துள்ளனர் என செவ்வாய்க்கிழமையன்று பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவன் குணசேகர ஊடகங்களிடம் தெரிவித்திருக்கிறார்.

குறிப்பாக மார்ச் 5 முதல் எட்டாம் திகதிவரை தாக்குதல்கள் தீவிரமாக இருந்தன எனவும் கண்டியில் மட்டும் 423 கடைகளும் வீடுகளும் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன எனவும் அவர் கூறினார். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக 280 பேர் கைதுசெய்யப்பட்டு, அவர்களில் 185 பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

### இந்தக் கலவரங்களை நடத்தியோர் யார்?

இந்தத் தாக்குதல் சம்பவங்களுக்கு ஆள்களைத் திரட்டி நடத்தியோர் யார் என்பது குறித்து தெளிவான தகவல்கள் இது வரை வெளியாகவில்லை. பொலிஸும் அதனை இதுவரை தெளிவுபடுத்தவில்லை. பலலேகெல்ல பொலிஸிடம் இது தொடர்பான தகவல்களைச் சேகரிக்க முயன்றபோது, அவர்கள் சந்திக்க மறுத்துவிட்டனர்.

இஸ்லாமியர்களைப் பொறுத்தவரை, இந்தப் பகுதியில் செயற்பட்டு வரும் 'மஹாசொன் பல ஏகாய' எனும் அமைப்பின் தலைவர் அமித் வீரசிங்க இதற்குக்காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம் இருக்கிறது. தற்போது அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவரது அலுவலகத்தில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் செவ்வாய்க் கிழமையன்று சோதனையும் நடத்தினர்.

கண்டியில் 1915ஆம் ஆண்டுக்குப் பிறகு, இஸ்லாமியர்களுக்கு எதிராக இவ்வளவு பெரிய தாக்குதல் நடப்பது இதுவே முதல் முறையாகும்.

சுமார் 1, 36,000 மக்கள்தொகையைக் கொண்டுள்ள கண்டியில், சிங்களவர்களே பெரும்பான்மையாக வசிக்கின் றனர். இங்கு வசிப்பவர்களில் 74 சதவீதம் பேர் சிங்களவர்கள். இஸ்லாமியர்கள் 13 சதவீதமும் தமிழர்கள் 12 சதவீதமும் இருக்கின்றனர்.

*

# யாழ் சமூக நிலை

## ஒரு கல்வியாளரின் பார்வை

பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை

**'வடக்கு இலங்கைக்கான கல்வி அபிவிருத்தி குழுமம்' என்ற பெயரில் லண்டனில் இயங்கி வரும் அமைப்பு, முன்னாள் யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசியருமான பொன். பாலசுந்தரம் பிள் ளையை லண்டனில் ஒரு நிகழ்வுக்கு அழைத்து யாழ். சமூக நிலைமைகள் குறித்து அவரிடம் கேட்டறிந்தது. அங்கு அவர் ஆற்றிய உரையின் தொகுப்பு இது.**

ஒரு காலத்தில் கல்வியை மூலதனமாகக் கொண்டிருந்த தமிழ் மக்கள் மத்தியில் இன்று தமிழ் மொழியைக் கற்பிப்பதற்குக் கூட ஆசிரியர்கள் இல்லை எனக் கூறி இலங்கை கல்வி அபிவிருத்தி பிரித்தானிய அமைப்பின் பேரில் லண்டன் உயர் குன்று முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட வடமாகாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தனது உரையை ஆரம்பித்தார். வட பகுதியின் இளைஞர்களின் கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் பொதுவான பொருளாதார நிலைமைகள் குறித்து அவரது பார்வையை அறியும் பொருட்டு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

வடமாகாண கல்வி நிலைமைகளின் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளமையை அவர் அவதானித்துள்ள போதிலும் அம்முன்னேற்றம் பல வகைகளில் மட்டுப்படுத் தப்படுவதாகக் குறிப்பிட்டு அதற்கான பிரதான காரணிகளையும் விளக்கினார். யாழ்ப்பாணத்திற்கு வெளியில் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற போதிலும் குடாநாட்டிற்குள் அதிக ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர் எனவும் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதை வெவ்வேறு காரணங்களால் தவிர்த்து வருகின்றனர் எனவும் அவ்வாறு வெளி மாவட்டங்களுக்குச் செல்பவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்வதால் அவ்வாசிரியர்களின் கவனம் அல்லது சக்தி முழுமையாக கிடைப்பதில்லை என்றார்.

**கல்வி நிலைமை**

கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது எனவும் இந்த இடைவெளியை தனியார் கல்வி நிறுவனங்கள் நிரப்புகின்றன எனவும் தெரிவித்த அவர். இப் பாடங்களில் முன்னேற்றம் காணப்பட வேண்டுமெனில் வெளித் தலையீடு அதாவது, அரச உதவிகளுக்கு வெளியில். வெளிநாட்டு உதவிகள் மூலம் குறிப்பிட்ட காலத்தில் வளர்ச்சியை ஏற்படுத்த ஒத்துழைப்பு அவசியம் என்றார். விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக அதற்கான கல்வி பயிலும் மாணவர் தொகை குறைகிறது. எதிர்காலத்தில் அதிக வேலை வாய்ப்புக்களைத் தரும் விஞ்ஞானக் கல்வி இல்லாமையால் அதிக அளவிலான வேலை வாய்ப்புக்களும் தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்காமல் போய் சமூகம் உயர்ந்த நிலையை அடைவதற்குக் கால தாமதம் ஏற்படுகிறது.



வெளி மாவட்டங்களில் காணப்படும் போக்குவரத்துப் பற்றாக்குறை, குடும்ப வருமானப் பற்றாக்குறை போன்ற காரணிகளால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதும் குறைந்துள்ளது. சில சமயங்களில் ஆசிரியர்கள் தமது தொழில்களைப் பாதுகாப்பதற்காக அல்லது மாணவர்களின் குடும்ப நிலைமைகளை நன்கு புரிந்து கொண்ட காரணத்தால் தாமே வீடுகளுக்குச் சென்று கல்வியின் அவசியத்தை உணர்த்தி வருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் வகுப்பறைகளில் மாணவர்கள் தொகை மிகவும் அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால், தற்போது மாணவர் தொகை மிகவும் குறைந்துள்ளது. சில பாடசாலைகளில் மாணவர் தொகை பற்றாக்குறையாக உள்ள நிலையிலும் இப் பாடசாலைகள் தொடர்ந்து இயக்கப்படுகின்றன. இதனால் ஒரு சிறிய பிரதேசத்திற்குள் அதிக பாடசாலைகள் குறைந்த மாணவர்களுடன் இயங்கிச் செலவினம் விரயமாக்கப்படுவதோடு ஆசிரியர்களின் பணியும் வீணடிக்கப்படுகின்றது.

இப் பாடசாலைகள் தொடர்ந்தும் இயக்கப்படுவதற்குக் காரணம் உண்டு. இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் குடியேறுவார்கள் என்ற எதிர்பார்ப்பின் காரணமாக அவை தொடர்ந்து இயக்கப்படுகின்றன.

வட பகுதியில் உயர் கல்வி நிறுவனங்கள் அதிகம் உள்ளன. ஆனால்,அக் கல்வியைப் பெறுவதற்கான மாணவர் தொகை வட பகுதியில் குறைந்துள்ளமையால் வெளி மாவட்டங்களின் மாணவர்களே அந்த இடைவெளியை அல்லது அப் பலாபலன்களைப் பெறுகின்றனர். பல்கலைக்கழகத்திற்கான மாணவர் அனுமதி தற்போது அதிகமாக உள்ளது. ஏனெனில் தனியார் பல்கலைக்கழகங்களும், வெளிநாட்டு கல்வி நிறுவனங்களின் வருகையும் அதிகம் காணப்படுகின்றமையால் உயர் கல்விக்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. இதனால் பல்கலைக்கழக புகுமுகத்திற்கான போட்டி குறைவாக உள்ளது. வாய்ப்புக்கள் அதிகம் காணப்பட்ட போதிலும் கல்வியில் உள்ள உற்சாகப் பற்றாக்குறை பிரதான காரணி எனக் குறிப்பிட்டார்.

**வேலை வாய்ப்பு**

வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தும் தொழிற்றுறை முதலீடுகள் வட பகுதியில் மிகவும் குறைந்துள்ளன. அங்கு உல்லாசப் பயணத்துறையை விஸ்தரிக்கும் வகையில் விருந்தினர் விடுதிகளே தற்போது அதிகமாகக் காணப்படுகின்றன எனத் தெரிவித்த அவர் இத் துறைக்கும் தேவையான, தகுதியான, பயிற்சியுடையவர்கள் கிடைப்பதில்லை எனவும், இதற்குக் கலாசார உணர்வுகளும் தடையாக இருக்கலாம் என்றார். இவ்வாறான சேவைத்துறைக்கு பல்மொழி அறிவு அவ சியம். குறிப்பாக, ஆங்கில அறிவு அவசி யம். இம் மொழி அறிவு குறைந்துள்ளமையால் அந்த வேலை வாய்ப்புக்களையும் வெளியாரே பெறுகின்றனர் எனத் தெரிவித்தார். இதனால் குறிப்பாக சுகாதாரத் துறையில் தாதி வேலைகளுக்கு விண்ணப்பிப்போர் தொகை குறைந்துள்ளது என்றார் அவர். பல முதலீடுகள் வேலை வாய்ப்பை அதிகரிப்பனவாக இல்லை என்றார்.

பட்டதாரிகளில் பலர் கலைத்துறைகளில் பட்டங்களை வைத்திருக்கின்றமையால்விகிதாசார அடிப்படையில் கிடைக்க வேண்டிய தொழில்களையும் அரசியல் தலையீடுகள் இருந்த போதிலும், பெற முடியாதுள்ளனர். இப் பட்டதாரிகள் 70 சதவீதத்துக்கு அதிகமானவர்கள் இளைஞர், யுவதிகள் ஆவர். அதில் பெரும்பாலானோர் யுவதிகளாவர். அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்காமையால் குடும்ப வாழ்விற்குள் செல்வதைத் தள்ளிப் போடுகின்றனர். இதனால் பிறப்பு விகிதம் குறைவடைந்துள்ளதோடு, பொருளாதாரக் காரணிகளால் பிள்ளைகளின் தொகையும் ஒன்று அல்லது இரண்டாக சுருங்கி விடுகிறது.

**மீன்பிடி, விவசாயம்**

விவசாயம், மீன்பிடி தொடர்பாக தெரிவிக்கையில் விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான உள் கட்டுமானங்களின் பற்றாக்குறையும், உள் பிரதேசங்களுக்குள் போதிய போக்குவரத்து இல்லாமையாலும், உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளமையாலும் விவசாய வருமானம் போதியளவாக இல்லை. அதே போலவே மீன்பிடித் தொழிலில் அந்நியப் படகுகளின் போட்டியும் போரின் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த மீன்பிடிச் சமூகம் பொருளாதார ரீதியில் இப் போட்டியில் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் இருக்கின்றமையாலும், சிங்கள சமூகத்தினரும் அதிக முதலீடுகளில் ஈடுபடுவதாலும் மீன்பிடி வாய்ப்புக்களும் நலிந்துள்ளன எனக் குறிப்பிட்டார்.

**சமூகம்**

இத்தகைய ஒட்டுமொத்த நிலமைகளால் குடும்பங்களின் தேவைகள் பெருகிய வேளையில் வருமானம் குறைந்தமையால் குடும்பத்தில் மத்தியில் சச்சரவுகள், அமைதியின்மை, குடிபோதை, போதை வஸ்து பாவனை, திருட்டு எனச் சமூக விரோத போக்குகளின் தளங்களாக சமூகம் மாறிவருகின்றமை குறித்துக் கவலையை வெளியிட்ட அவர், இவற்றைக் கட்டுப்படுத்தும் சட்டம், ஒழுங்கைக் கவனிக்கும் பிரிவினரும் சரியாகச் செயற்படாதமையால் அவை விரிசல் அடைந்து, மேலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்றார். அத்துடன் உள்நாட்டு மூலவளங்



களும் சட்டத்திற்கு புறம்பானவகையில் கொள்ளையிடப்படுகின்றன. உதாரணமாக மணல் திருட்டு, பசுக்கள் திருட்டு என்பன தினசரி நிகழ்வுகளாக உள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் ஏற்பட்டு வரும் அகதிகள் தொடர்பான பிரச்சினைகளும், இறுக்கமான சட்ட மூலங்களும் வெளி நாட்டவரைத் திருமணம் செய்தும் இணைவதற்கான நீடித்த கால அவகாசமும் இளைஞர், யுவதிகள் மத்தியிலே காணப்படும் வெளிநாட்டு மோகத்தைத் தணித்துள்ளன எனக் குறிப்பிட்டார்.

தமிழ்ப் பிரதேச அபிவிருத்தியில் கவ னம் செலுத்துவது அவசியம் எனத் தெரி வித்த அவர், தற்போது வட பகுதியில் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி மன்னார் கப்பல் போக்குவரத்து என்பன வளர்ந்து வரும் தமிழ்நாட்டு அபிவிருத்தியை வடக்குக் கிழக்கு பகுதியில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்க உதவலாம். இதற்குப் பொருத்தமான அரசியல் தலைமுறையும் அவசியம் என்றார். ★



> **பட்டதாரிகள் 70 சதவீதத்துக்கு அதிகமானவர்கள் இளைஞர், யுவதிகள் ஆவர். அதில் பெரும் பாலானோர் யுவதிகளாவர். அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்காமையால் குடும்ப வாழ்விற்குள் செல்வதைத் தள்ளிப் போடுகின்றனர்.**

# புத்தளம் உணவு விடுதிக்கு தீவைப்பு திட்டமிட்ட சதி என்கின்றனர் பொலிஸார்



புத்தளம், ஆனமடுவ முஸ்லிம் உணவு விடுதி மீதான பெற்றோல் குண்டுத் தாக்குதலானது, திட்டமிடப்பட்டு, தாக்குதலுக்கு முன்தினம் சதித்திட்டம் தீட்டப்பட்டு மேற்கொள்ளப்பட்டது என விசாரணையாளர்களுக்கு தகவல் கிடைத்துள்ளது என்று புத்தளம் மாவட்ட உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த பெற்றோல் குண்டுத் தக்குதலுக்கு முன்னைய தினம் த.மு.தஸநாயக்க விளையாட்டு மைதானத்தில் இரவோடிரவாக 20 இற்கும் அதிகமான இளைஞர்கள் ஒன்றுகூடி, இந்தத் தாக்குதலுக்கத்திட்டமிட்டமை தொடர்பில் விசாரணை அதிகாரிகள் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி ஏற்கனவே இந்த தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பாடசாலை மாணவன் ஒருவன் உள்ளிட்ட 7 பேரும், 2018 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க அவசர கால சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் மூன்று மோட்டார் சைக்கிள்களில் வருகை தந்துள்ள சந்தேக நபர்கள் இந்த ஹோட்டல் மீது தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றிருந்தனர்.

முதலில் ஹோட்டலின் முன் பகுதியில் பெற்றோலை ஊற்றி விட்டுப் பின்னர் பெற்றோல் குண்டுத்தாக்குதலை நடத்தியமை தொடர்பில் விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டன. அத்துடன், தாக்குதலுக்கு வந்த மூன்று மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நிலையில், தீக்கிரையான ஹோட்டலுக்கு அருகில் உள்ள மற்றொரு வர்த்தக நிலைய சி.சி.ரி.வி.கமராவில் இருந்த பதிவுகளை மையப்படுத்தி ஒரு சந்தேக நபரைக் கைது செய்ததாகவும் அதனைத் தொடர்ந்து அவரிடம் முன்னெடுத்த விசாரணைகளில் ஏனையோர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே, ஆனமடுவ தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட 7 சந்தேக நபர்களுக்கும் கண்டி வன்முறைகளுடனோ அதன் சூத்திரதாரிகளான மஹாசன் அமைப்பினருடனோ தொடர்புகள் உள்ளனவா எனவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஆறு வருடங்கள் திருமணம் செய்யாமல் ஒன்றாக வாழ்ந்த ஜோடிக்கு திருமணம்



திருமணம் செய்து கொள்ளாமல் ஜோடியாக வாழ்ந்த தம்பதிக்கு அமைச்சர்கள் இருவர் திருமணம் செய்து வைத்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

6 வருடங்கள் ஒன்றாக வாழ்ந்த போதிலும் திருமணம் செய்து கொள்ளாத ஜோடிக்கு அமைச்சர்கள் இருவர் திருமணம் செய்து வைத்துள்ளனர்.

குருணாகலை, பரந்தன பிரதேசத்தை சேர்ந்த 28 வயதான சரத் ராஜபக்ஷ மற்றும் 25 வயதான மனீர் மதுவந்தி என்ற தம்பதியே 6 வருடங்கள் ஒன்றாக வாழ்ந்த போதிலும் திருமணம் செய்து கொள்ளாத நிலையில் இவ்வாறு திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்.

குருணாகலை பாடசாலை ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தத் திருமண நிகழ்வு இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதி நடமாடும் சேவையால் இந்தத் திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நடமாடும் சேவையைக் கண்காணித்த அமைச்சர்களான, அமைச்சர் வஜிர அபேவர்தன மற்றும் பிரதி அமைச்சர் ஜே.சி. அலவலத்துவல ஆகியோர் தலைமையில் இந்தத் திருமணம் நடைபெற்றுள்ளதுடன், சாட்சிக் கையெழுத்தும் இவர்களே வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதிக்கப்பட்ட கண்டி மக்களுக்கு ரவி கருணாநாயக்க நிதி உதவி

கொழும்பு, மார்ச் 16

வன்முறைகள் இடம்பெற்ற கண்டி திகண மற்றும் தெல் தெனிய பிரதேசங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்க விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவி வழங்கியுள்ளார்.

தெல்தெனிய பிரதேசத்திற்கு நேற்றுமுன்தினம் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, உயிரிழந்த சிங்களக் குடும்பஸ்தரது குடும்பத்தினருக்கு ஒரு லட்சம் ரூபா நிதியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

மேலும் அவர்களுக்கு நிரந்தர வருமானம் வரும்வரை மாதாந்தம் 20 ஆயிரம் ரூபாவை வழங்கவும் வாக்குறுதி அளித்துள்ளார்.



இதேபோன்று, திகண பிரதேசத்தில் இடம்பெற்ற கலவரத்திற்கு மத்தியில் உயிரிழந்த முஸ்லிம் இளைஞரது குடும்ப அங்கத்தவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க சந்தித்துள்ளார்.

அவர்களுக்கும் ஒரு லட்சம் ரூபா வழங்கியதோடு நிரந்தர வருமானம் கிடைக்கும்வரை மாதாந்தம் 20 ஆயிரம் ரூபாவை வழங்கவும் உறுதி வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரான தனக்கு மாதாந்தம் கிடைக்கப்பெறும் வருமானத்தை இவ்வாறு நன்கொடையாக இவர்களுக்கு வழங்குவதாக ரவி கருணாநாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

## நீரிழிவுக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் விலைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 16

நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்தும் உபகரணங்கள் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுவதால், அவற்றுக்கான விலைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகச் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நீரிழிவு நோயாளர்களின் இரத்தத்தில் காணப்படும் சீனியின் அளவை பரீட்சிக்கும் Glucose Stripes மற்றும் Glucose Machine ஆகியவற்றின் விலைகள் இங்கு ஒழுங்குபடுத்தப்படவுள்ளன.

Glucose Stripes 25 அடங்கிய பக்கட் ஒன்று 1,500 ரூபாயிலிருந்து அதிகமான விலைக்கு சந்தையில் விற்பனை செய்யப்படும் அதே வேளை, Glucose Machine ஒன்று 2,500 ரூபாயிலிருந்து பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றது.

தனியார் வைத்தியசாலைகளில் அறவிடப்படும் 53 வகையான விலைகள் கட்டுப்படுத்தப்பட்ட பின்னர் புற்றுநோயாளர்கள் பயன்படுத்தும் மருந்துவகைகளின் விலைகளைக் குறைக்க சுகாதார அமைச்சர் எதிர்பார்த்துள்ளார்.

அதனை அடுத்து நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்தும் உபகரணங்களின் விலைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

## பிரபல சிங்கள நடிகை மரணம்



திரைப்படம் மற்றும் சின்னத்திரையில் நடித்த பிரபல சிங்கள நடிகை ஏட்னா சுஹதபால உயிரிழந்துள்ளார்.

கொழும்பு தனியார் மருத்துவமனையில் நேற்று முன்தினம் திடீர் என உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுகவீனம் காரணமாகக் கொழும்பு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன் தினம் இவர் திடீர் என உயிரிழந்துள்ளார். இவரது மரணம் ரசிகர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவர் தனது 72 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். முகாமையாளர் சம்மேளனமும் (Jmf) இலங்கை பொறியலாளர் நிறுவக வட பிராந்தியமும் (IESL) இணைந்து சுற்றுச் சூழல் விவசாயம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு வளவாளராக மேற்கு சிட்னி பல்கலைக்கழக பேராசிரியர் ஆசி. காந்தராஜா கலந்து கொள்ள வுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி சம்மேளன ஒருங்கிணைப்பாளர் வி. நிரஞ்சன் அழைப்பு விடுத்துள்ளார்.

# முறிந்து விழுந்த மின் கம்பம்: அச்சத்தில் வாழும் மக்கள்

கொழும்பு, மார்ச் 16

அக்கரப்பத்தனை - கல் மதுரை தோட்டத்தில் உள்ள இரண்டாம் இலக்கம் கொண்ட குடியிருப்புப் பகுதியில் உக்கிய நிலையில் காணப்பட்ட மின்கம்பம் கடந்த மாதம் 20 ஆம் திகதி பெய்த கடும் மழையால் முறிந்து குடியிருப்பு மீது விழுந்துள்ளது.

இதனால் இக்குடியிருப்புப் பகுதியில் வாழும் சுமார் 25 குடும்பங்களைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் அச்சத்திலேயே வாழ்ந்து வருகின்றனர்.

மின் கம்பிகளும், வீடுகளின் கூரை மேல் விழுந்து காணப்படுவதன் காரணமாக மின் கம்பங்களை மாற்றித் தருமாறு லிந்துலை மின்சார சபைக்கு அறிவித்த போதிலும், இது வரை நடவடிக்கை எடுக்கவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

❖ **23 ஆம் , 24 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழுள்ள அட்டவணையைப் பயன்படுத்துக.**

| தானியங்கள் | பழங்கள் | .....B..... |
|---|---|---|
| குரக்கன் | வாழைப்பழம் | பாகற்காய் |
| உழுந்து | தோடம்பழம் | வெண்டிக்காய் |
| .......A....... | மாம்பழம் | கத்தரிக்காய் |

23. இடைவெளி B இற்குப் பொருத்தமான சொல் எது?
1. கிழங்கு வகை 2. மரக்கறிகள் 3. கீரை வகைகள்

24. இடைவெளி A இற்குப் பொருத்தமான சொல் எது?
1. வெங்காயம் 2. பயறு 3. அன்னாசிப்பழம்


25. பிழையாக எழுதப்பட்டுள்ள கோவையைத் தெரிவு செய்க.
1. $8 \times 8 - 8 = 60 - 4$ 2. $3 \times 12 + 4 = 8 x 5$ 3. $7 \times 6 + 6 = 10 x 5$

26. உருவைப் பார்த்து சரியான விடையைத் தெரிவு செய்க.



முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள உருவின் பரப்பளவின் எத்தனை மடங்கு ஆகும்?
1. 8 மடங்கு 2. 4 மடங்கு 3. 2 மடங்கு

27.




சதுரமுகியொன்று மூன்று பக்கங்களால் பார்க்கும் போது தோன்றும் விதத்தை உருக்கள் காட்டுகின்றன. அதன்படி R முகத்திற்கு எதிர்ப்பக்கத்திலுள்ள முகம் எது?
1. A 2. K 3. B

**தனுசன் ஆண்பிள்ளை ஆவான். தனுசனின் அக்காவிற்கு இரண்டு ஆண் சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.**

28. தனுசனுக்கு எத்தனை சகோதரர் உள்ளனர்?
1. 4 2. 1 3. 3

29. தனுசனுக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?
1. 4 2. 2 3. 3

30. சொற்கோலத்தை அவதானித்து இடைவெளியில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.

பதவி → வித்து → துறவி → ..................................
1. விறகு 2. படகு 3. திகதி







# கல்விக் கதிர் வெளியீடு
## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
தரம்-5 வினாத்தாள் **21**
பகுதி - I நேரம் - 45 நிமிடம்

❖ **ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**


❖ **1 ஆம் , 2 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவைப் பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.**

01. 
1.  2.  3. 

02. 
1.  2.  3. 

❖ **கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

03.  ____________ , ____________
1.  2.  3. 


04.  ____________
1.  2.  3. 

05. எல்லா மாணவர்களுக்கும் பொதுவான பண்பு
1. தினமும் வீட்டுப்பாடம் தொடர்பான வேலைகளில் ஈடுபடுதல்.
2. அதிக எண்ணிக்கையான நண்பர்களைக் கொண்டிருத்தல்.
3. ஏதேனும் ஒரு வகுப்பில் கல்வி கற்றல்.

06. தேன்கூடு ஒன்றில் உள்ள தேனீக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நிமிடத்திற்கும் இரட்டிப்பாக மாறுகின்றது. தேன் கூட்டின் $\frac{1}{4}$ பகுதி தேனீக்கள் மு. ப 8.57ற்கு காணப்பட்டது. தேன்கூடு தேனீக்களால் முழுமையாக நிரம்பியிருந்த நேரம்
1. மு.ப 8.58 2. மு. ப 9.00 3. மு.ப 8.59

❖ 07, 08 ஆகிய வினாக்களின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

07.




1. 32     2. 36     3. 38


08.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 1 | 6 |
| 4 | A | 3 | 24 |
| 2 | 3 | B | 30 |
| 16 | 18 | 15 | |

A, B ஆகியவற்றுக்குரிய இலக்கங்கள் முறையே

1. 3, 2     2. 2, 5     3. 5, 3

09.



இக் குறியீட்டினால் குறித்துக் காட்டக் கூடிய மிகப் பொருத்தமான சொல் எது?

1. வதனம்     2. கரகம்     3. வடிவம்

❖ **பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய சொற்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.**


10. **ஊன்** உணவு உடல் நலத்திற்கு **கேடு** விளைவிக்கும்.

1. உணவு, இன்பம்     2. இறைச்சி, தீங்கு     3. உணவு, தீங்கு

11. சுரேன் **தடாகத்தில்** உள்ள **கமலப்** பூக்களைப் பறித்தான்.

1. வாவியில், மலர்களைப்     2. பொய்கையில், தாமரைப்     3. ஆற்றில், புஸ்பம்

12.



இவ்வுருவில் ஆக்கக் கூடிய சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 13     2. 14     3. 17

13. இரு பகுதிகளிலும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

1. A 5 பட்டு 25 மாது – A 5 படது 52 மாது
2. B 4 கடது 571 மன் – B 4 கடது 517 மன்
3. 33 லகட D41 படது – 33 லகட D41 படது

14. மிகச் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

1. கொதித்தாறிய நீரைப் பறுகுவோம்.
2. கொதித்தாறிய நீரைப் பருகுவோம்.
3. கொதித்தாறிய நீரப் பருகுவோம்






15. மன்னார் நகரமும் வியாங்கொட நகரமும் பருமனில் சமனானவை. வியாங்கொட நகரம் மட்டக்களப்பு நகரத்தை விடப் பெரியது. வியாங்கொட நகரம் வவுனியா நகரத்தை விடச் சிறிது. பருமனில் சிறிய நகரம் எது?

1. மன்னார்     2. வியாங்கொட     3. மட்டக்களப்பு

16.




இச் செவ்வக அட்டையில் இருந்து ஒரு பக்க நீளம் 3cm கொண்ட எத்தனை சதுரக் கட்டங்களை வெட்டி எடுக்க முடியும்?

1. 12     2. 08     3. 10


17. ஐம்பது நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கும் ஒரு கடிகாரம் உள்ளது. அது மூன்றாவது தடவை மு. ப 9.10 இற்கு ஒலித்தது எனின், முதல் தடவை ஒலித்த நேரம் யாது?

1. மு.ப 8.20     2. மு. ப 7.30     3. மு. ப 7.40

18. "கிடைக்கும் சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது" எனும் கருத்தைத் தரும் பழமொழி யாது?

1. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.
2. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
3. எறும்பூரக் கற்குழியும்.

19.



உருவில் காணப்படும் திண்மப் பொருளை முறிந்த கோட்டின் வழியே வெட்டும் போது கிடைக்கும் முகத்தின் வடிவம் யாது?

1. சதுரம்     2. செவ்வகம்     3. முக்கோணம்

20. அருண் காலையில் பாடசாலைக்கு நடந்து செல்லும் போது அவனது நிழல் அவனுக்கு முன்னால் விழுந்தது எனின், அவன் செல்லும் திசை யாது?

1. மேற்கு     2. கிழக்கு     3. வடக்கு

❖ R.ACD.MN ஐப் பெறுமதியாக ரூ. 843.50 எனக் காட்டலாம் எனின்,

21. ரூ. 458.45 ஐ எவ்வாறு காட்டலாம்?

1. R.DAM.NA     2. R.CMA.CM     3. R.CAM.CM

22. R.ANMD.CA இனால் காட்டப்படுவது யாது?

1. ரூ 843.80     2. ரூ. 8054.48     3. ரூ. 8053.48

# மியன்மாரில் பேஸ்புக் மிருகமாக மாறியுள்ளது



## ஐ.நா குற்றச்சாட்டு

வொஷிங்டன்,மார்ச்.16

மியான்மாரில் ரோஹிஞ்சா முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்புணர்வைத் தூண்டுவதில் பேஸ்புக் ஒரு பங்கு வகிக்கிறது என ஐ.நாவின் விசாரணை குற்றஞ்சாட்டியுள்ளது.

மியன்மாரில் இனப்படுகொலை பற்றி சாத்தியமான செயல்களை ஆராய்ந்த ஐ.நா குழு ஒன்று, பேஸ்புக் ஒரு மிருகமாக மாறியுள்ளது என கூறி யிருக்கிறது.

மியன்மாரின் ரக்கைன் மாகாணத்தில், இராணுவம் தனது நடவடிக்கைகளைத் தொடங்கியதில் இருந்து கிட்டதட்டத் 7 லட்சம் ரோஹிஞ்சா முஸ்லிம்கள் பங்களாதேஷிற்குத்தப்பித்துச்சென்றுள்ளனர்.

பேஸ்புக்அதன்தளத்தில் வெறுப்பு பேச்சுக்கு இடமில்லை என்று கூறியுள்ளது.

இந்த நிலையில் ரோஹிஞ்சா முஸ்லிம்களுக்கு எதிராகக் கசப்புணர்வு பரப்பியதில் சமூக வலைதளம் முக்கிய பங்காற்றியுள்ளது என ஐ.நா. குழுவின் தலைவர் மார்சுகி தருஸ்மான் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(பு)

## 18 வயது நிரம்பினாலும் புகைப் பிடிக்கத் தடை

பீஜிங்,மார்ச்.16

ஜப்பானில் 18 வயது நிரம்பினாலும் புகை பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் பெரியவர்கள் ஆனதற்கான சட்டபூர்வமான வயது வரம்பை 20இல் இருந்து 18ஆகக் குறைக்க ஜப்பான் அரசு முயன்று வருகிறது.

20 வயதில் சட்டப்பூர்வமாகப் பெரியவர்களானதைக் கொண்டாடும் நிகழ்வில் ஒரு ஜப்பானிய பெண் இந்த முன்மொழிவு அமுல்படுத்தப்பட்டால் 18 வயது நிரம்பியவர்களுக்கு வங்கியில் கடன் வாங்குதல், பெற்றோர் அனுமதியின்றி திருமணம் செய்து கொள்ளுதல் உள்ளிட்ட உரிமைகள் கிடைக்கும்.



எனினும், புகை பிடித்தல், மது அருந்துதல், சூதாட்டத்தில் ஈடுபடுதல் ஆகியவற்றை 20 வயது முடியும் வரை செய்யமுடியாது.

இது தொடர்பான சட்ட பிரேரணை ஜப்பான் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டால், புதிய வயது வரம்பு 2022ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வரும்.

# நவாஸ் ஷெரீப் வீட்டருகே வெடிகுண்டுத் தாக்குதல்

### ஒன்பது பேர் உயிரிழப்பு



இஸ்லாமாபாத்,மார்ச்.16

ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு பதவி இழந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் வீட்டின் அருகே நடந்த வெடிகுண்டு தாக்குதலில் மூன்று பொலிஸார் உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.

பனாமா பேப்பர்ஸ் விவகாரத்தில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு பதவியை இழந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், தற்போது விசாரணையை எதிர்கொண்டு வருகிறார். லாகூரில் அவருக்குக் சொந்தமான இல்லம் உள்ளது.

இந்த நிலையில், நவாஸ் ஷெரீப்பின் இல்லம் அருகே உள்ள நிசார் சோதனைச் சாவடியில் நேற்று இரவு பயங்கரச் சத்தத்துடன் வெடிகுண்டு வெடித்தது. இந்த வெடிகுண்டு தாக்குதலில் மூன்று பொலிஸார் உட்பட ஒன்று பேர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் படுகாயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் சிலரது நிலைமை மோசமாக உள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் தற்கொலைப் படைத் தாக்குதலா? என்பது பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரை எந்தப் பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.



### உளவாளி இரசாயன விம் மூலம் தாக்குதல்:

# ரஷ்ய தூதரக அதிகாரிகள் வெளியேற பிரிட்டன் கெடு



லண்டன்,மார்ச்.16

முன்னாள் உளவாளி இரசாயன விம் மூலம் தாக்கப்பட்டுள்ள விவகாரத்தில் ரஷ்யாவுடன் மோதல் முற்றியுள்ள நிலையில், 23 ரஷ்யத் தூதரக அதிகாரிகளை நாட்டை விட்டு வெளியேற பிரிட்டன் கெடு விதித்துள்ளது.

ரஷ்யாவின் இராணுவ உளவுப்பிரிவில் அதிகாரியாகப் பணியாற்றியவர் செர்ஜய் ஸ்கிர்பால். இவர் சில ரஷ்ய உளவாளிகளை இங்கிலாந்து உளவுத் துறையினரிடம் காட்டிக் கொடுத்தமைக்காகக் கடந்த 2004ஆம் ஆண்டு மொஸ்கோவில் கைது செய்யப்பட்டார். 13 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அவரை 2010ஆம் ஆண்டு பிரிட்டன் அரசு மீட்டு அடைக்கலம் கொடுத்தது.

தற்போது பிரிட்டனில் வசித்து வரும் ஸ்கிர்பால், கடந்த 4ஆம் திகதி சாலிஸ்பரி நகரில் உள்ள ஒரு வணிக வளாகத்துக்கு வெளியே தனது மகள் யூலியாவுடன் மயங்கிய நிலையில் கிடந்தார். அவர்களது உடலில் விம் ஏறியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது இருவரும் மருத்துவமனையில் கவலைக்கிடமான முறையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் பிரிட்டனுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் தொடர்பாக பிரதமர் தெரசா மே தேசிய பாதுகாப்புச் சபையைக் கூட்டி ஆலோசனை நடத்தினார். இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யா தனது விளக்கத்தை அளிக்க வேண்டும் என பிரிட்டன் கோரியது.

ஆனால், பிரிட்டனின் குற்றச்சாட்டுகளை மறுத்த ரஷ்யா இது தொடர்பாக எந்த விளக்கத்தையும் தரவில்லை.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் தெரசா மே, ஸ்கிர்பால் மற்றும் அவரது மகளுக்கு விம் ஏற்றப்பட்டதற்கு ரஷ்ய அரசுதான் கொலை முயற்சிக் குற்றவாளியாகும் எனத் தெரிவித்தார். அத்துடன் 23 ரஷ்ய தூதரக அதிகாரிகளை பிரிட்டனை விட்டு வெளியேற வேண்டும் என்றும் கெடு விதித்துள்ளார்.

### அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்:

# டிரம்ப்-ரஷ்யா இடையேயான தொடர்புக்கு ஆதாரமில்லை

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போது, ட்ரம்ப்-ரஷ்யா இடையே தொடர்பு இருந்தது என்பதற்கு ஆதாரம் இல்லை என நாடாளுமன்ற விசாரணைக் குழுவினர் கூறுகின்றனர்.

அமெரிக்காவில் 2016ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. இதில் குடியரசுக் கட்சி வேட்பாளராக டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயக கட்சி வேட்பாளராக ஹிலாரி கிளிண்டனும் போட்டியிட்டனர். இந்தத் தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

ஆனால் இந்த தேர்தலில் ட்ரம்பின் பிரசாரக் குழுவினரும், ரஷ்ய நாட்டினரும் கூட்டுச் சதியில் ஈடுபட்டு, ஹிலாரியை தோற்கடித்தனர் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இந்தக் குற்றச்சாட்டை இரு தரப்பினரும் மறுத்தனர்.

இருப்பினும் இது தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையின் (கீழ்சபை) உளவுக்குழு விசாரணை நடத்தியது. இந்த விசாரணை ஓராண்டு காலம் நடைபெற்றது.

இந்த விசாரணை குழுவினர், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா தலையிட்டது என்பதை ஒப்புக்கொண்டனர். அதே நேரத்தில், இது ட்ரம்ப் வெற்றி பெறுவதற்கு உதவியது என்ற அமெரிக்க உளவுத்துறையினரின் தகவலை நிராகரித்தனர்.

# இரண்டரை மில்லியன் ஆண்டுகள் பழைமையான சுறா மீனின் பல் திருட்டு

ஆஸ்திரேலியாவில் உள்ள தேசிய பூங்காவில் பாதுகாக்கப்பட்டு வந்த 2.5 ஆண்டுகள் பழைமையான சுறா இனத்தைச் சேர்ந்த மீனின் பல் திருடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் மேற்கு பகுதியில் உள்ள தேசிய பூங்காவில் மிகவும் பழைமையான மீனின் பல் பாதுகாக்கப்பட்டு வந்தது. இந்தப் பல் 2.6 மில்லியனுக்கு முன் வாழ்ந்த சுறா இனத்தைச் சேர்ந்த மீனிடமிருந்து பெறப்பட்டது. மிகப்பெரிய பற்களைக் கொண்ட இந்த மீன்கள் திமிங்கிலம் போன்ற பெரிய மீன்களை உணவாக உண்டு வாழ்ந்து வந்துள்ளன.



அழிந்துபோன இனமான இந்த மீனின் பல் இரண்டு மட்டுமே உள்ளது. அதில் ஒன்று இந்த பாரம்பரிய தளத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தது. அதனை மர்ம நபர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

# ‘அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்’



## தினகரனின் புதிய அமைப்பு

மதுரை,மார்ச் 16

மதுரை மேலூரில் இன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், அம்மா மக்கள் முன்னேற்றக்கழகம் என தனது அமைப்பின் பெயரை அறிவித்துள்ளார் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் டி.டி.வி. தினகரன்.

இ.பி.எஸ்.-ஓ.பி.எஸ். அணியிடம் இருந்து கட்சியையும், இரட்டை இலைச் சின்னத்தையும் மீட்கும் வரை தன்னுடைய அமைப்பு, குக்கர் சின்னத்தில் அனைத்து தேர்தல்களிலும் போட்டியிடும் என அமைப்பின் அறிமுகவிழாவில் பேசிய டி.டி.வி. தினகரன் குறிப்பிட்டார்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் தனது அமைப்பின் கொடியையையும் தினகரன் வெளியிட்டார்; அதில் அ.தி.மு.க. கொடியில் உள்ள கறுப்பு, வெள்ளை, சிவப்பு,வண்ணங்களுடன், மத்தியில் ஜெயலலிதா படம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களாக நமது உறுப்பினர்கள் பெயர் இல்லாமல் செயல்பட்டனர். எந்த நிகழ்ச்சிகளையும் நாம் ஏற்பாடு செய்யமுடியவில்லை. நிகழ்ச்சிகளை நடத்த அனுமதி வாங்கும்போது, அமைப்பின் பெயர் அவசியம் என்பதாலும், துரோகிகளிடம் இருந்து அ.தி.மு.கவை காப்பாற்றவேண்டும் என்பதாலும் புதிய பெயருடன் நாம் செயல்படுவோம்’ என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து பெற காலவரையற்ற உண்ணாவிரதம்

### நடிகர் பவன் கல்யாண் அறிவிப்பு



அமராவதி,மார்ச்.16

ஆந்திராவுக்குசிறப்பு அந்தஸ்து வழங்க மத்திய அரசை வலியுறுத்தி காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்க தயார் என்று ஜனசேனா கட்சியின் தலைவர் நடிகர் பவன் கல்யாண் அறிவித்துள்ளார்.

பிரபல தெலுங்கு நடிகர் பவன் கல்யாண், ஜனசேனா என்ற பெயரில் கட்சி தொடங்கி நடத்தி வருகிறார். இந்த கட்சியின் 4ஆவது ஆண்டு விழா நேற்று அமராவதி நகரில் நடைபெற்றது.

அந்த விழாவில் அவர் பேசுகையில் கூறியதாவது:-


மத்திய அரசு கடந்த 4 ஆண்டுகளாக ஆந்திர மாநிலத்துக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்காமல் அநீதி இழைத்து வருகிறது. ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்காமல் தாமதப்படுத்துவது அரசியல்சாசனத்தை மீறும் செயல் ஆகும்.

மத்திய அரசு காலம் தாழ்த்தாமல் இந்த பிரச்சினையில் முடிவு எடுக்கவேண்டும். வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்குமாறு மத்திய அரசை வற்புறுத்தி காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்க நான் தயாராக இருக்கிறேன். இந்த கோரிக்கைக்காக நாம் போராடத் தயாராக இருக்கிறோம்.

சந்திரபாபு நாயுடுவின் ஆட்சியில் ஆந்திராவில் ஊழல் பெருகிவிட்டது. அதன் விளைவை அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் அவரது தெலுங்கு தேசம் கட்சி சந்திக்க நேரிடும் என்று தெரிவித்துள்ளார்.

# கமலின் மக்கள் நீதி மய்யத்தில் பெயரைப் பதிவு செய்த தமிழிசை?

## ஆதாரத்தை வெளியிட்ட மக்கள் நீதி மய்யம்



சென்னை,மார்ச் 16

பா.ஜ.க. தமிழகத் தலைவர் தமிழிசை, மக்கள் நீதி மய்யம் இணையத்தளத்தில் தொலைபேசி எண்ணையும் இணைத்து பதிவு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

நடிகர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு இணையத் தளம் வாயிலாக உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெற்று வருகிறது. ஒன்லைனில் விண்ணப்பித்தவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் கட்சியில் இணைந்ததற்கான தகவல்கள் அனுப்பப்படும்.

திருப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழிசை, மக்கள் நீதி மய்யம் கட்சியில்தான் இணைந்துள்ளேன் என, மின்னஞ்சல் வந்துள்ளது எனத் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், ‘கமல் தற்போது அவரின் கட்சிக்கு உறுப்பினர்களைச் சேர்த்து வருகிறார். நான் ஒன்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப் பட்டுச் சிரிப்பீர்கள்... மக்கள் நீதி மய்யத்தில் நான் இணைந்து விட்டேன் என எனக்கு மின்னஞ்சல் அனுப்பியிருக்கிறார்கள். அந்த மின்னஞ்சலில் 'நான் நாம் ஆனோம். இன்றிலிருந்து எங்கள் கட்சியில் நீங்கள் உறுப்பினர் ஆனீர்கள். உங்களது உறுப்பினர் எண் இதுதான்’ என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

என் மெயில் ஐ.டி. எப்படி இவர்களுக்குக் கிடைத்தது? உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக, கிடைக்கும் மின்னஞ்சல் முகவரிக்கெல்லாம் கமல் அழைப்பு அனுப்புகிறார். இப்படிப்பட்ட அப்பட்டமான பொய்யான கட்சியை நடத்தி வருகிறார். கையில் கிடைக்கும் மின்னஞ்சல் கணக்கிற்கு எல்லாம் செய்தி அனுப்புகிறார்’ என்று கமலை வசைபாடினார்.

இணையத்தில் பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே மின்னஞ்சல் அனுப்பப்படும்’ என்று மக்கள் நீதி மய்யம் சார்பில் ஏற்கெனவே விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், தங்கள் இணையதளத்தில் தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் சட்டமன்றத் தொகுதி உள்ளிட்ட விவரங்களை அளித்து தமிழிசை பதிவு செய்ததற்கான புகைப்பட ஆதாரத்தை மக்கள் நீதி மய்யம் கட்சி வெளியிட்டது. இதுதொடர்பாக மக்கள் நீதி மய்யம் கட்சியின் அதிகார பூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில்,

ஆதலால்உங்கள்தொலைபேசி எண்ணில் மட்டும் தற்போதைக்குக் கரி பூசியிருக்கிறோம். உங்கள் பழைய முதலாளிகளின் கோபத்திற்கு அஞ்சினால் செய்த பதிவை ரத்து செய்துகொள்ளவும் வழியிருக்கிறது. அதுவரை ... பதிவு செய்தமைக்கு நன்றி’’ என்று தெரிவிக் கப்பட்டிருக்கிறது.

(ப)

## உலகின் மகிழ்ச்சியான நாடுகளில் 133ஆவது இடத்தில் இந்தியா

புதுடில்லி,மார்ச் 16

ஐ.நா.அமைப்புஒன்று உலகின் மகிழ்ச்சியாக மக்கள்வாழும்நாடுபற்றி நடத்திய ஆய்வில் இந்தியாவுக்கு 133ஆவது இடம் கிடைத்துள்ளது.

உலகின் ஐ.நா.வின் நிலையான அபிவிருத்தி தீர்வுகள் கட்டமைப்பு (UNSDSN) என்ற அமைப்பு கடந்த சில மாதங்களாக 2018ஆம் ஆண்டின் உலகின் மகிழ்ச்சியான நாடு எது என்ற ஓர் ஆய்வை நடத்தியது. ஒன்லைன் மூலம் நடந்த இந்த ஆய்வின் முடிவு தற்போது வெளியாகியுள்ளது.

மொத்தம் 156 நாடுகள் இந்த ஆய்வில் பங்கேற்றிருந்த நிலையில் பின்லாந்து நாட்டு மக்கள் தான் உலகிலேயே அதிக மகிழ்ச்சியாக வாழும் மக்கள் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. பின்லாந்தைத் தொடர்ந்து நோர்வே, டென்மார்க், ஐஸ்லாந்து மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகள் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன. அமெரிக்கா 18 ஆவது இடத்தில்உள்ளது.

இந்தப்பட்டியலில் இந்தியாவுக்கு 133ஆவது இடம் கிடைத்துள்ளது. இந்தியாவிற்கு கடந்த ஆண்டு 122ஆவது இடம் கிடைத்த நிலையில் இந்த ஆண்டு 11 இடங்கள் பின் தங்கியுள்ளது. ஊழல் ஒழிப்பு, சமூக விடுதலை, பணப்புழக்கம் ஆகியவைகளை அடிப்படையாக கொண்டு இந்த ஆய்வு எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உளவாளி என கிராமவாசிகளை சுட்டுக் கொன்ற நக்சலைட்கள்

ராஞ்சி,மார்ச் 16

ஜார்கண்ட் மாநிலத்தில் பொலிஸாருக்கு உளவுத் தகவல்களை அளித்தனர் எனக் குற்றம்சாட்டி இரண்டு அப்பாவி கிராமவாசிகளை நக்சலைட்கள் சுட்டுக் கொன்றுள்ளனர்.

சத்தீஸ்கர், ஜார்கண்ட் மாநிலத்தில் நக்சலைட்கள் மற்றும் மாவோயிஸ்ட்களின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. பணக்காரர்கள் மற்றும் அரசியல் செல்வாக்கு மிக்கவர்களை குறிவைத்து தாக்குதல் நடத்திவரும் இந்த குழுவினர் அவ்வப்போது பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரையும் தாக்கிக் கொல்கின்றனர்.



தடைசெய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்த இந்தக் குழுவினரை தடுத்து நிறுத்த நக்சல் ஒழிப்பு படை என்ற தனிப்படைப் பிரிவு இயங்கி வருகிறது. காட்டுப் பகுதிகளில் மறைந்திருக்கு நக்சலைட்களையும், மாவோயிஸ்ட்களையும் இந்தத் தனிப்படையினர் கைது செய்தும், சுட்டுக் கொன்றும் வருகின்றனர்.

இந்த நிலையில், ஜார்கண்ட் மாநிலம் செராய்கெலா - கார்ஸ்வான் மாவட்டங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள மருதங்கா கிராமத்தில் பொலிஸாருக்கு உளவுத் தகவல்களை அளித்தனர் எனக் குற்றம்சாட்டி ஒரு பெண் உட்பட இருவரை நக்சலைட்டுகள் சுட்டுக்கொன்றுள்ளனர். பொலிஸாருக்கு தகவல் கொடுத்தமைக்காக அவர்களைச் சுட்டுகொன்றோம் என்ற பதாகைகளையும் நக்சலைட்டுகள் விட்டுச் சென்றுள்ளனர்.

## இறுதிக்குள் இந்திய அணி:

# முக்கிய போட்டியில் மோதும் பங்களாதேஷ் – இலங்கை

தனது இறுதி லீக் போட்டியில் பங்களாதேஷ் அணியை 17 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இந்திய அணி சுதந்திரக்கிண்ணத் திற்கான இறுதிப் போட்டியில் விளையாடும் முதல் அணியாக தன்னை உறுதிசெய்தது.

சுதந்திரக்கிண்ண இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் இந்திய அணி தனது கடைசி லீக் ஆட்டத் தில் பங்களாதேஷுடன் நேற்று முன்தினம் மோதியது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களா தேஷ் அணி முதலில் இந்திய அணியைத் துடுப்பெடுத்தாடு மாறு பணித்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 176 ஓட்டங்க ளைப் பெற்றது.

இந்திய அணி சார்பாக அதிரடி யாக விளையாடிய இந்திய அணி யின் தலைவர் ரோஹித் சர்மா 89 ஓட்டங்களையும் தவான் 35 ஓட்டங்களையும் ரெய்னா 47 ஓட் டங்களையும் பெற்றுக்கொடுத் தனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் ரூபெல் ஹுசெய்ன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றி னார்.

இந்த நிலையில் 177 ஓட்டங் களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பங்களா தேஷ் அணி இறுதிவரை போராடி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக் கெட்டுகளை இழந்து 159 ஓட் டங்களைப் பெற்று 17 ஓட்டங் களால் தோல்வியைத் தழுவி யது.

பங்களாதேஷ் அணி சார்பில் துடுப்பாட்டத்தில் முஸ்பிகுர்ரஹீம் ஆட்டமிழக்காது 72 ஓட்டங் களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் வொஷிங்டன் சுந்தர் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றி னார்.

புள்ளிப் பட்டியலின் அடிப்ப டையில் 4 போட்டிகளில் விளை யாடியுள்ள இந்திய அணி 3 போட்டி களில் வெற்றி ஒரு போட்டியில் தோல்வியுற்று 6 புள்ளிகளுடன் முதலாவது அணியாகவும் 3 போட்டிகளில் விளையாடியுள்ள இலங்கை அணி, ஒரு போட்டியில் வெற்றி 2 போட்டியில் தோல்வி யுற்று 2 புள்ளிகளுடன் 2 ஆவது அணியாகவும் 3 போட்டிகளில் விளையாடியுள்ள பங்களாதேஷ் அணி ஒரு போட்டியில் வெற்றி 2 போட்டிகளில் தோல்வியடைந்து 2 புள்ளிகளுடன் 3 ஆவது அணி யாகவும் உள்ளன.

இந்த நிலையில் இன்று இடம்பெறும் போட்டி இறுதிப் போட்டியை விட முக்கியமான தொரு போட்டியாக இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகளுக்கிடையில் இடம் பெறவுள்ளது.

இப் போட்டியில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டி யில் இந்திய அணியை எதிர்த் தாடவுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# சென்னை சூப்பர் கிங்ஸில் சான்ட்னெர் திடீர் விலகல்



நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் மிட் செல் சான்ட்னெருக்கு கால்முட்டியில் ஏற்பட்ட காயம் காரணமாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இருந்து விலகி உள்ளார்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் மிட் செல் சான்ட்னெருக்கு, இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரின் போது முழங்காலில் காயம் ஏற்பட்டது. 'ஸ்கேன்' பரிசோதனையில், கால் முட்டியில் எலும்பில் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றமை தெரியவந்தது. காயத்தன்மை மோசமாக இருக் கின்றமையால் சத்திரசிகிச்சை செய்வதே சிறந்த வழி என்று வைத்தியர்கள் அறிவுரை வழங்கியுள்ளனர். இதையடுத்து சத்திரசிகிச்சை செய்ய முடிவு செய்திருக்கிறார்.

அதன் பிறகு அவர் 6 முதல் 9 மாதங்கள் வரை ஓய்வு எடுக்க வேண்டி இருக்கும். இதனால் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் மற்றும் ஏப்ரல் 7 ஆம் திகதி தொடங்கும் ஐ.பி. எல். கிரிக்கெட் போட்டி ஆகியவற்றில் அவர் விளையாட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

சான்ட்னெரை, சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 50 லட்சம் ரூபாவிற்கு ஏலத்தில் வாங்கி இருந்தது. 26 வயதான சான்ட்னெர் சிக்கனமாக சுழற்பந்து வீசுகின்றமை மட்டுமின்றி, அதிரடி யாக துடுப்பாட்டமும் செய்யக்கூடியவர். அவரது விலகல், சென்னை அணிக்குப் பின்ன டைவு என்பதில் சந்தேகமில்லை.

# ஓய்வின் பின்னர் போட்டியில் சிறப்பாகச் செயற்படுவேன்

நிதாஹாஸ் முத்தரப்பு போட்டியில் விளையாடாமல் ஓய்வு எடுத்து வரும் இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லி ஐ.பி.எல். போட்டியில் சிறப்பாக செயற்படப் போகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி யின் கப்டன் விராட் கோஹ்லி இலங்கையில் நடைபெறஉள்ள நிதாஹாஸ் முத்தரப்புப் போட்டி யில் விளையாடவில்லை. அவர் தற்சமயம் ஓய்வு பெற்று வருகிறார்.



விராட் கோஹ்லி

தனது ஓய்வு பற்றிப் பேசிய அவர், விளையாட்டு வீரர்க ளுக்கு ஓய்வு என்பது மிகவும் முக்கியம். கிரிக்கெட்டில் ஏற்ப டும் பணிச்சுமை எனக்கு மிகவும் கடினமாக உள்ளது. நான் தற் போது ஒரே இடத்தில் அமர்ந்து ஓய்வு எடுக்கிறேன். நான் மைதானத்தில் இருப்பதற்கும், வீட்டில் இருப்பதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. வீட்டில் அமைதியாக இருக்க விரும்பு கிறேன்.

ஓய்வு எடுக்கும்போது மனம், உடல் அமைதியடைகின்றன. அதனால் புத்துணர்வு ஏற்படும். ஓய்வு முடிந்து ஐ.பி.எல். போட்டி யில் விளையாடும்போது சிறப் பாகச் செயற்படுவேன் இவ் வாறு விராட் கோஹ்லி தெரி வித்தார்.

# இலங்கை வீரர்களுக்கு பார்சிலோனா பயன்படுத்திய மென்பொருள்



இலங்கை கிரிக்கெட் வீரர்களின் திறமையை மேலும் அதிகரிக்கும் நோக்கிலும், எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் தயாராகும் வகையிலும் உலகின் பிரபல உதை பந்து கழகமாக பார்சிலோனா கழகம் பயன்படுத் துகின்ற விமுப்ரோ என்ற தொழில்நுட்ப ஆய்வு நுணுக் கத்தை பின்பற்றுவதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, தற்போது நடைபெற்று வருகின்ற சுதந்திர கிண்ண முத்தரப்பு ரி – 20 தொடரிலிருந்து இந்தப் புதிய கருவியை கையில் பொருத்திக் கொண்டு இலங்கை வீரர்கள் போட்டிகளில் விளையாடி வருகின்றனர் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உடற்தகுதி பயிற்றுவிப்பாளர் நிக் லீயின் தலைமையில் கடந்த திங்கட்கிழமை சுதந்திர கிண்ண முத்தரப்பு தொடருக்காக இலங்கை வந்துள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர்க ளுக்காக கொழும்பில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே இந்த புதிய உபகரணம் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன்போது, பார்சிலோனா உதைபந்து கழகத்தி னால் வீரர்களின் உடற் செயற்பாடுகளைத் தொடர்ந்து ஆராய்வதற்காகவும், மைதானத்தில் உள்ள வீரர்களின் உடல் அசைவுகளை தொடர்ந்து மேற்பார்வை செய்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் பயன் படுத்தப்படுகின்ற இந்த விசேட மென்பொருள் உபகரணத் தை பார்வையிடுவதற்கு வெளிநாட்டு ஊடகவியலாளர் களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இதன்படி, அண்மைக்காலமாகத் தொடர் தோல்வி கள், உபாதைகள் காரணமாக பின்னடைவை சந்தி த்து வந்த இலங்கை அணிக்கு இந்தப் புதிய மென் பொருள் அணியின் முன்னேற்றத்துக்கும், வெற் றிக்கும் உதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

# கோஹ்லியை குடும்பமாக அழைக்கிறார் தயாசிறி



அவரது மனைவி அனுஷ்கா ஷர்மாவு டன் இலங்கைக்கு வர வேண்டும் என, இலங் கையின் விளையாட் டுத் துறை அமைச்சர் அழைப்பு விடுத்துள் ளார்.

இலங்கையின் விளையாட்டுத் துறை அமைச்சரான தயாசிறி ஜயசேகரா இந்திய வீரர் விராட் கோஹ்லியின் தீவிர ரசிகர் ஆவார். இலங்கை அணி, இந்தியா வில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியபோது, கோஹ்லியின் ஆட்டத்தைக் காண்பதற்காகவே இந்தியா வந்தவர் ஜெயசேகர.

இந்த நிலையில் விராட் கோஹ்லி, அவரது மனைவி அனுஷ்கா ஷர்மாவுடன் இலங்கைக்கு வரவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

இது பற்றி ஜயசேகர கூறுகையில், விராட் கோஹ்லியை விளையாடுவதற்காக இலங்கைக்கு அழைக்கவில்லை. அவர் தனது மனைவியுடன் இலங்கையில் சில நாள்கள் செலவழிக்க வேண்டும்.

திருமணத்திற்குப் பிறகு அவர் இலங்கைக்கு வரவில்லை. இப்போது எங்கள் நாட்டு விருந்தி னராக அவர் வரவேண்டும். எங்கள் நாட்டில் பார்ப்பதற்குச் சில நல்ல சுற்றுலாத் தளங்கள் உள்ளன' எனத் தெரிவித்துள்ளார்.

## ஆலயங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஆலயங்களில் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகள் இயக்கப்படுவதால் அவற்றின் சூழலில் வாழும் வயோதிபர்கள் நெஞ்சு அழுத்தத்துக்கு உள்ளாக்கப்படுவதாகக் குறிப்பிட்ட முதலமைச்சர், குற்றவியல் சட்டக்கோவையின் 98ஆம் பிரிவின் கீழ் ஆலய நிர்வாகங்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் பொலிஸாருக்குச் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண பொலிஸ் அதிகாரிகளுக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் இடையே சிறப்புச் சந்திப்பு ஒன்று முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதன்போதே முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காலத்துக்குக் காலம் பொலிஸாருடன் பேச்சுக்கள் நடத்தப்படும். எமக்கு மக்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் பொலிஸாரிடம் தெரிவிக்கப்படும். அது தொடர்பில் எடுக்கப்படவேண்டியநடவடிக்கைகள் குறித்தும் பேசப்படும்.

வடக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் பொலிஸாருக்கு உள்ள பற்றாக்குறையை நிரப்புவதற்காக 81 ஆண்களும் 2 பெண்களும் இங்கு புதிய பொலிஸ் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கை போதாது. எனினும் முதல் கட்டமாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் சேவைக்குள் இணையுமாறு தமிழ் இளையோரிடம் நான் கோருவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் என்னை விமர்சித்துள்ளார். பொலிஸில் இணையுமாறு முதலமைச்சர் ஏன் கோருகிறார்? என்பதாக அவர் கேள்வி எழுப்புகிறார்.

தமிழ் பேசுகின்ற தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இல்லை என்றால் எமது மக்கள்தான் பாதிக்கப்படுவர். எமது மக்கள், பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு ஒன்றை வழங்கவேண்டுமாயின், அங்கு தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர் இல்லாவிடின் பல மணிநேரம் காத்திருக்கவேண்டும். எனவே பாதிக்கப்படுவது எமது மக்கள்தான்.

இதனால்தான் தமிழ் பொலிஸ்உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு எம்மால் கோரப்பட்ட நிலையில் தற்போது 83 பேரைப் புதிதாக நியமித்துள்ளனர்.

**ஒலிபெருக்கிப் பாவனை**

ஆலயங்களில் ஒலிக்கவிடப்படும் ஒலிபெருக்கிகளின் சத்தங்களால் அவற்றைச் சூழவுள்ள பகுதிகளைச் சேர்ந்த வயோதிபர்கள் நெஞ்சு அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர் என எமக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்தன. இந்த நடவடிக்கைக்கு எதிராக குற்றவியல் சட்டக்கோவை 98ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும் எனப் பொலிஸாரிடம் சுட்டிக்காட்டியுள்ளேன். அது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**மணல் கடத்தல் தடுப்பு**

சட்டவிரோத மண் அகழ்வுகள் வடக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ளமை தொடர்பில் பொலிஸார் கருத்து வெளியிட்டனர். மணல் கடத்தல்களைத் தடுக்கத் தங்களால் இயன்ற நடவடிக்கைகளை எடுப்பதாகப் பொலிஸார் கூறினர்.

**கட்டாக்காலிகள் திருட்டு**

யாழ்ப்பாணம் தீவகத்தில் கட்டாக்காலி மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை தொடர்பில் பொலிஸாரிடம் எடுத்துக் கூறினேன். தீவகத்தில் கட்டாக்காலி மாடுகளை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது உள்ளிட்ட விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

மாட்டிறைச்சி விற்பனைக்குத் தடை விதிக்கப்படுமாயின் மாடுகள் திருடப்படுவதைக் கட்டுப்படுத்த முடியும் எனப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. மாட்டிறைச்சி உண்பவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்ற முறையில் பொலிஸாரின்யோசனை நிராகரிக்கப்பட்டது. – என்றார். (ஐ)

## மகேந்திரனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்வதற்கான பிடியாணையைக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்தது.

இலங்கை மத்திய வங்கியில் அவர் ஆளுநராக இருந்தபோது பிணைமுறி, வழங்கலில் மோசடி இடம்பெற்றது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழு அர்ஜுன் மகேந்திரன் உள்ளிட்டோர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை வழங்கியது.

இந்த விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளைஆரம்பித்துள்ளது. பிணை முறி மோசடி தொடர்பான ஆரம்ப விசாரணைகளின் பின்னர் பர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ், அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அர்ஜுன் மகேந்திரனைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்குமாறு ஏற்கனவே இரண்டு முறை நீதிமன்றாது உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும், அவர் இதுவரை குற்றப்புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கவில்லை. கைதுசெய்யப்படலாம் என்ற அச்சத்திலேயே அவர் வெளிநாடொன்றில் தலைமறைவாகியுள்ளார் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலே அர்ஜுன் மகேந்திரனைக் கைது செய்வதற்கான பிடியாணையை நீதிமன்றம் பிறப்பித்தது.

பர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ், அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன மற்றும் பர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனம் ஆகிய தரப்பினருடன் தொடர்பு வைத்திருந்த நபர்களின் தொலைபேசி உரையாடல் சம்பந்தமான அறிக்கையைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்குமாறு தொலைபேசி சேவை நிறுவனங்களுக்குக் கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோரை எதிர்வரும் மார்ச் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ஐ)

## ஹிரோசிமாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமாக நேற்று வியாழக்கிழமை இரண்டாம் உலக கப் போரின்போது அணுகுண்டுத் தாக்குதலுக்கு இலக்கான ஹிரோசிமா நகருக்கு பயணம் மேற்கொண்டார்.

ஹிரோசிமா நகருக்குச் சென்ற ஜனாதிபதி, அந்த நகரின் நகர பிதாவினால் வரவேற்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து ஹிரோசிமா நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்திய ஜனாதிபதி, அங்குள்ள நூதனசாலையையும் பார்வையிட்டார்.

ஹிரோசிமா தாக்குதல் இடம்பெற்ற இடத்தைப் பார்வையிட்ட ஜனாதிபதி, அந்தப் பிரதேசத்தில் பாதுகாக்கப்பட்டுவரும் கட்டடங்களையும் பார்வையிட்டார்.

1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்துகொண்டிருந்த போது அமெரிக்காவால் 'லிட்டில் போய்' எனப்படும் அணுகுண்டு ஜப்பானின் ஹிரோசிமா நகரின் மீது போடப்பட்டது. இதில் 90 வீத நகரம் அழிவுக்குட்பட்டதுடன், 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஒரேநேரத்தில் உயிரிழந்தனர். இதேபோன்றதொரு அணுகுண்டு நாகசாகியிலும் போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.நாவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலைகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகச் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜெனீவாவில் நடக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் வலியுறுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் நேற்றைய போராட்டத்தின்போது கோரினர்.

''ஐ.நா. சபையே! ஏன் மௌனம்?' என்ற வாசகம் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு உறவுகள் அமைதியான முறையில் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமற்போனோரின் பிரச்சினைக்கு ஒரு உறுதியான தீர்வை ஐ.நா. எட்டாதவரை காணாமற்போனோரின் உறவுகளால் வடக்கு – கிழக்கில் நடத்தப்பட்டு வரும் போராட்டங்கள் தொடரும் என்றும் அவர்கள் கூறினர்.

அரசியல் தலைமைகள் மீதும், இலங்கை அரசின் மீதும் முற்றாக நம்பிக்கை இழந்த நிலையிலேயே தாம் தற்போது சர்வதேசத்தின் உதவியை நாடியுள்ளதாகவும் காணாமற்போனோரின் உறவினர்கள் கூறினர். (ஐ-7)

## ஞானசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இனங்களுக்கிடையில் குரோதத்தை உண்டாக்கும் வகையில் கருத்துத் தெரிவித்தமை தொடர்பில் ஞானசார தேரருக்கு எதிராக ஒழுங்குபடுத்தப்பட்ட குற்ற ஒழிப்புப் பிரிவினரால் முன்வைக்கப்பட்டிருக்கும் வழக்கில், அவர் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியமையால் இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பேஸ்புக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க ஒத்துழைப்பு வழங்க முகநூல் நிறுவனம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

– இவ்வாறு ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கும் பேஸ்புக் அதிகாரிகளுக்குமிடையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இந்தத் தீர்மானங்கள் மற்றும் உடன்பாடுகள் குறித்து தற்போது ஜப்பானுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிவிக்கப்பட்டது. அதனைக் கேட்டறிந்த ஜனாதிபதி, பேஸ்புக் மீதான தடையை நீக்கப் பணிப்புரை விடுத்தார்.

கடந்த சில நாள்களாக தேசிய ஐக்கியத்துக்கும், மக்கள் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்படும் விதத்தில் கலவரச் சூழ்நிலை பரவுவதைத் தவிர்க்கும் வகையில் சில சமூக ஊடகங்களுக்குள் பிரவேசிப்பதற்குத் தற்காலிகத் தடை விதிக்க அரசு நடவடிக்கை எடுத்தது.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு இந்த நடவடிக்கை காரணமாக அமைந்ததுடன், மக்கள் பாதுகாப்புக் குறித்து உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு சமூக வலைத்தளங்களுக்கு மீண்டும் பிரவேசிப்பதற்கான வாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

ஜனாதிபதியின்பணிப்புரைக்கேற்ப ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவால் நேற்று பேஸ்புக்சமூக வலையமைப்பின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டது.

சமூக ஊடக வலையமைப்பை பிழையாகப் பயன்படுத்தி இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பி மக்கள் வாழ்க்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்துதல், மக்கள் வாழ்க்கையைச் சீர்குலைத்தல் மற்றும் சில அடிப்படைவாதிகளால் சமூக ஊடக வலையமைப்பு துஷ்பிரயோகம்செய்யப்படுவது குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அந்தவகையில் இனவாத, மதவாத வெறுப்புப் பேச்சுக்கள் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக முறைமைகளையும் நிறுவனக் கட்டமைப்பையும் ஏற்படுத்துவதற்கு பேஸ்புக் அதிகாரிகள் உடன்பட்டனர்.

இதன்போது அரசு, பொது மக்கள் அல்லது குற்ற விசாரணை நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் விடயங்கள் தொடர்பில் உடனடியாகப் பதிலளிக்கவும் செயற்படவும் உடன்பாடு தெரிவிக்கப்பட்டது.

பேஸ்புக் சமூக ஊடகத்தைப் பயன்படுத்தி வெறுப்புப் பேச்சுக்களை பரப்புவது இலங்கைச் சட்டத்தின் கீழ் குற்றமாகும் என்பதுடன், அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக பேஸ்புக் சமூக உடன்படிக்கைக்கேற்ப செயற்படும் அந்த நிறுவனம் இணக்கம் தெரிவித்தது.

இந்த உடன்பாடு குறித்து முன்னேற்ற மீளாய்வொன்றை உரிய கால இடைவெளியில் இரு தரப்புக்கும் இடையில் மேற்கொள்வதற்கும் அதற்கேற்ப மிகவும் வினைத்திறனான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்திட்டமிட்டவகையில் எதிர்காலத்தில் செயற்படவும் இரு தரப்பிற்கும் இடையில் இணக்கம் காணப்பட்டது.

இந்தத் தற்காலிக சமூக ஊடகத் தடை காரணமாகச் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்து அரசு கவலை தெரிவிக்கிறது. – என்றுள்ளது. (ஐ)

## நடேஸ்வராக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கைதடியில் உள்ள வடமாகாணமுதலமைச்சரின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை பொலிஸ் அதிகாரிகளுக்கும் முதலமைச்சருக்கும் இடையே கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர், அது குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நடேஸ்வராக் கல்லூரிக்குச் சொந்தமான கட்டடம் மற்றும் பாடசாலைக் கிணற்றையும் பொலிஸார் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கமால் தம் வசம் வைத்துள்ளார்கள். அது தொடர்பில்வடமாகாணசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் கேள்வி எழுப்பினேன்.

இன்றைய தினமே(நேற்று) பாடசாலைக் கட்டடத்தையும் கிணற்றையும் கையளிக்க நடவடிக்கை எடுப்போம் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் உறுதியளித்தார். – என்றார்.

இராணுவ ஆக்கிரமிப்பில் 27 வருடங்களாக இருந்த காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மீளக் கையளிக்கப்பட்டுத் தற்போது இயங்கி வருகின்றது.

இந்த நிலையில், கடந்த இரண்டு வருட காலமாகப் பாடசாலைக் கட்டடம் ஒன்றையும் கிணற்றையும் பொலிஸார் தம் வசம் வைத்துள்ளனர். அதனால் மாணவர்கள் கிணற்றைப் பாவிக்க முடியாததால் தண்ணீர் அருந்துவதற்குப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

அது தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வடமாகாண சபை அமர்வின் போது, ஆளுங்கட்சிஉறுப்பினர் பா.கஜதீபன் சபையில் சுட்டிக்காட்டிப் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## நீங்கியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தடை நீக்கப்பட்டதாக அறி விக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட வன்முறைச்சம்பவங்களை அடுத்து கடந்த 7 ஆம் திகதி முதல் நாட்டில் சமூக வலைத் தளங்களுக்குள் நுழைவதற்குப் பாதுகாப்புக் கருதி தற்காலிகத் தடை விதிக்கப்பட் டிருந்தது.

இந்நிலையில் பேஸ்புக் நிறுவன அதிகாரிகள் இலங்கை வந்து நேற்றுப் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இந்தப் பேச்சில் இணக்கம் எட்டப்பட்ட நிலையில், பேஸ்புக் மீதான தற்காலிகத் தடையை உடன் அமுலுக்கு வரும் வகையில் நீக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து பேஸ்புக் மீதான தடை நீக்கப்பட்டு இலங்கை வாழ் மக்கள் பேஸ்புக்கை தடையின்றிப் பார்க்கக் கூடியவாறு உள்ளது. (ஐ)

காலைக்கதிர்
Kalaikkathir


# மன்னாரில் பெய்த மழையால் பல கிராமங்களில் வெள்ளம்!





மன்னாரில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை பெய்த மழை காரணமாக மன்னாரில் தாழ்வுப் பிரதேசத்தில் காணப்படும் பல குடியிருப்புப் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக, அண்மையில் காணி வழங்கப்பட்டு மீள்குடியமர்த்தப்பட்ட சில கிராமங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சாந்தி புரம், ஜீவபுரம், ஜிம்ரோன் நகர், எமில் நகர் போன்ற கிராமங்களில் உள்ள



வீடுகளும், பாதைகளும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இதனால், இந்தக் கிராமங்களில் உள்ள பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ச்சியாக மழை நீடித்தால் இந்தக் கிராமங்களில் உள்ளவர்கள் இடம்பெயர வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஹெரோயினுடன் மூன்று பேர் கைது

கொழும்பு, மார்ச் 16

கொழும்பில் இருவேறு இடங்களில் ஹெரோயின் போதைப் பொருளுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 150.6 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



65 வயதான இந்த நபர் கொட்டாஞ்சேனை சுமித்ராராம மாவத்தை சேர்ந்தவர் எனவும், அவர் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கிராண்ட்பாஸ் ஸ்டேட் வீதியில் புத்தர் சிலைக்கு அருகில் 5.05 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்றுமுன்தினம் மதியம் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

46 வயதான இந்த நபர் ஸ்டேட் வீதியைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே கிராண்ட்பாஸ் ஸ்டேட் வீதியில் 15.1 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 39 வயதான பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

### தந்தையின் அவதானக் குறைவால்

# 2 வயதுக் குழந்தை பரிதாபமாகப் பலி

கொழும்பு, மார்ச் 16

முச்சக்கர வண்டியில் இருந்து வெளியில் விழுந்த 2 வயதான குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் பொலனறுவை அரலகங்வில தலுகான பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டி வீட்டுக்கு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது, குறித்த குழந்தை யாருக்கும் தெரியாமல் அதில் ஏறியுள்ளது.

இதனை அறியாத அந்தக் குழந்தையின் தந்தை முச்சக்கர வண்டியை இயக்கிய போது, குழந்தை தவறி விழுந்து படுகாயம் அடைந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

எனினும் சிகிச்சை பயனின்றிக் குழந்தை உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், குழந்தைகள் குறித்து பெற்றோர் மிகவும் அவதானமாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ஒரு லட்சம் கிராப் மீன் குஞ்சுகள் காசல்ரீ நீர்த்தேக்கத்தில் விடப்பட்டன

கொழும்பு, மார்ச் 16

நன்னீர் மீன் வளர்ப்பு தொழிலை ஊக்குவிக்கும் வகையில் காசல்ரீ நீர்த்தேக்கத்தில் ஒரு லட்சம் கிராப் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

காசல்ரீ நன்னீர் மீன்பிடி தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க நுவரெலியா நன்னீர் மீன் வளர்ப்புத் திணைக்களத்தினால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காசல்ரீ நீர்த்தேக்கத்தில் பாதுகாப்புக் கூடுகள் அமைத்து விடப்பட்ட மேற்படி மீன் குஞ்சுகள் ஒரு மாத கால வளர்ச்சியின் பின்னர் நீர்த்தேக்கத்தில் விடப்படுவதுடன், வருடத்தில் 20 மடங்கு இனப் பெருக்கத்தைக் கொண்டதாகவும் 6 மாத காலத்தில் 2 கிலோகிராம் வரை வளர்ச்சியடையும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, 45 மீனவக் குடும்பங்கள் தமது



வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தும் மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் மேற் படி திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்டியில் தாக்கப்பட்ட பள்ளிவாசல்களை புனர்நிர்மாணம் செய்வதைத் தவிர்க்கவும்

கொழும்பு, மார்ச் 16

கண்டி மாவட்டத்தில் சிங்கள பயங்கரவாதிகளால் எரிக்கப்பட்ட பள்ளிகளை இடித்து விட்டு அவ்விடத்தில் புதிய பள்ளிகளைக் கட்டுவதைத் தவிர்க்க வேண்டும் என உலமா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

சிங்களப் பயங்கரவாதிகளால் உடைக்கப்பட்ட எந்தவொரு பள்ளிவாசலும் அரசால் தவிர வேறு யாராலும் திருத்தப்படக் கூடாது என்பதே தமது நிலைப்பாடாகும் எனவும் இந்த நிலைப்பாட்டிலேயே முஸ்லிம் சமூகமும் இருப்பது காலத்தின் அவசியமாகும் எனவும் உலமாக் கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தாக்கப்பட்ட பள்ளிகளை அப்படியே இருக்க விடுவதன் மூலமே பள்ளி உடைப்புக்குத் துணைபோன ஐ.தே.க. தலைமையிலான அரசுக்கும் இலங்கையின் சிங்களப் பயங்கரவாத இனவாதிகளுக்கும் அவ



உலமா கட்சி தெரிவிப்பு

மான சின்னமாகவும் இந்த எரியூட்டப்பட்ட பள்ளிகள் இருக்கும்.

அது மட்டுமல்லாமல் இந்தத் தேசத்தின் எதிர்காலப் பரம்பரைக்கும் நம் மீது இழைக்கப்பட்ட அநீதியைக் காட்டுவதாக அமையும் என்பதுடன் எதிர் காலத்திலும் மீண்டும் கட்டப்பட்ட பள்ளிகள் எரியூட்டப்படுவதை மனோரீதியாகத் தடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

காத்தான்குடியில் புலிகளால் தொழுகையாளிகள் சுட்டுக் கொல்லப்பட்ட பள்ளியின் துப்பாக்கிக் குண்டின் அடையாளத்தை அம்மக்கள் இன்னமும் அப்படியே வைத்துள்ளார்கள் என்ற தூரநோக்கை கண்டி முஸ்லிம்களும் புரிய வேண்டும்.

அதே போல், கண்டியில் தாக்கப்பட்ட பள்ளிவாசல்களை அரசு முழுமையாக திருத்தாத பட்சத்தில் அவ்வாறே வைத்திருப்பதன் மூலம் இலங்கைக்கு வரும் வெளிநாட்டினரும் நம் மீது மேற்கொள்ளப்பட்ட அநீதிகளைக் காணமுடியும். அரசின் கையாலாகாத் தனத்தையும் புரிய முடியும்.

இந்த நிலையில் அதே பள்ளிகளை அப்படியே இருக்க வேறு புதிய பள்ளிகளைக் கட்டிக்கொள்ளலாம். அவற்றைப் பிரதான வீதியில் கட்டாமல் ஊருக்குள் கட்டுவது சிறந்ததாகும் என உலமாக் கட்சி தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

# வடக்கில் கன மழை பெய்யும் சாத்தியம்!

இலங்கையின் மேற்குப் பகுதியில் அராபியக் கடற்பரப்பில் ஏற்பட்ட காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் தற்போது கொழும்பிலிருந்து 950 கி.மீ தூரத்தில் மையம் கொண்டுள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.


இது வலுவிழந்து நாட்டை விட்டு மேலும் விலகிச் செல்லக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.



எனவே நாட்டிலும் மேற்கு கடற்பரப்பு வானிலையிலும் இதன் தாக்கம் மிகவும் குறைவாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பலதடவைகள் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

ஏனைய பிரதேசங்களில் குறிப்பாக வடமேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் மன்னார் மாவட்டத்திலும் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக அப்பிரதேசங்களில் காற்றும் வீசக் கூடும். மின்னலிலிருந்து ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.


















இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.